மே - ஜூன் 2026

தமிழாக்கம்

# The Herald

## of Christ's Kingdom



# பேதுருவின் விசுவாசப் பயணம்

- அப்போஸ்தலனாகிய பேதுரு
- விழிப்புணர்வும் ஆர்வமும்
- பேதுருவின் அசைக்கமுடியாத வைராக்கியம்
- பேதுருவின் தனிப்பட்ட மனமடிவு
- விசுவாசத்தின் வீரியம் மீட்கப்பட்டது
- பேதுருவின் முழுமையான ஆவிக்குரிய முன்னேற்றம்
- ஒரு தொலைநோக்குப் பணி

# பேதுருவின் விசுவாசப் பயணம்

## ஆதியிலே



பேதுருவின் எழுச்சியூட்டும் விசுவாசப் பயணம், நமது சொந்த வாழ்க்கைப் பயணத்திற்கு பாடங்களை வழங்குகிறது. அவருடைய சீஷத்துவப் பயணத்தின் காலவரிசையை, அவரது விசுவாசத்தின் முதல் தீப்பொறியிலிருந்து அவரது ஆழமான மற்றும் தொலைநோக்கு கொண்ட ஊழியம் வரை, நம்முடன் சேர்ந்து படியுங்கள். நீங்கள் அவருடன் சேர்ந்து பயணித்து, நமது பரலோக பிதாவுக்கு இன்னும் நெருங்கிச் செல்வீர்கள் என்பதே நமது விசுவாசம்.

**அப்போஸ்தலனாகிய பேதுரு** ஒரு தாழ்மையான மீனவர். தைரியமான, ஆவியால் வழிநடத்தப்பட்ட தலைவராக மாறியதை விவரிக்கிறார். அற்புத மீன்பிடிப்பிலிருந்து அலங்கார வாசலில் நிகழ்ந்த குணப்படுத்துதல் வரை, பேதுருவின் செயல்கள் சுவிசேஷ யுகத்தின் தீர்க்கதரிசன வளர்ச்சியை எவ்வாறு பிரதிபலித்தன என்பதைக் கண்டறியுங்கள். மூன்றாம் மற்றும் ஒன்பதாம் மணி நேரங்களிலுள்ள ஆழமான அர்த்தங்களையும், பேதுருவின் ஆரம்பகால அனுவங்கள் சபையின் வரலாற்றுப் பயணத்தை எவ்வாறு முன்னறிவித்தன என்பதையும் ஆராயுங்கள். "**விழிப்புணர்வும் ஆர்வமும்**" என்ற பாடம், அவருடைய ஆவிக்குரிய விழிப்புணர்வின் தொடக்கத்தை ஆராய்கிறது. ஒரு சாதாரண ஆர்வம் எப்படி ஒரு வலுவான உறுதியான நம்பிக்கையாக மாறுகிறது? தண்ணீரின் மீது நடந்ததிலிருந்து மறுரூப காட்சி வரை, பேதுருவின் விசுவாசம், கேள்விகள் மற்றும் தெய்வீக வல்லமையுள்ள அனுபவங்கள் அவருடைய விழிப்புணர்வை வடிவமைந்தன. கிறிஸ்துவைப் புரிந்துகொள்ள வேண்டும் என்ற உண்மையான ஆசை, நோக்கமும் பணியும் நிறைந்த ஒரு வாழ்க்கைக்கு வழிவகுத்தது. "**பேதுருவின் அசைக்கமுடியாத வைாக்கியம்**" என்ற பாடம், மனித ஆற்றலை மட்டும் கொண்டு தேவனுக்கு சேவை செய்வதில் உள்ள ஆபத்தை ஆராய்கிறது. பேதுரு அடிக்கடி தைரியமாகச் செயல்பட்டார். ஆனால் புரிதல் இல்லாமல் இருந்தார். இது அவர் இயேசுவிடமிருந்து கண்டனம் பெறுவதற்கு வழிவகுத்தது. வைராக்கியம் எப்போது ஒரு இடறலாக மாறுகிறது? தனது சித்தத்தை தேவனுடைய சித்தத்துடன் இணைக்க பேதுரு மேற்கொண்ட போராட்டத்தை ஆராய்வதன் மூலம், நமது தீர்ப்பில் ஏற்படும் தவறுகள் இறுதியில் உண்மையான தாழ்மைக்கும் கீழ்ப்படிதலுக்கும் எவ்வாறு வழிவகுக்கும் என்பதை இந்தக் கட்டுரை காட்டுகிறது.

"**பேதுருவின் தனிப்பட்ட மனமடிவு**" என்ற பாடம், ஆத்துமாவின் இருண்ட இரவுக்குள் செல்கிறது. ஒரு அர்ப்பணிப்புள்ள சீஷன் தன் கர்த்தரை மூன்று முறை எப்படி மறுதலிக்க முடியும்? கெத்செமனே தோட்டத்தில் உறங்கியது முதல் முற்றத்தில் கசந்து அழுகும் வரை, பேதுருவின் தன்னம்பிக்கை சிதைந்ததை இந்தக் கட்டுரை ஆராய்கிறது. பெருமையை அகற்றி நிலைத்திருக்கும் கிருபைக்காக இருதயத்தைத் தயார்படுத்த, இத்தகைய நொறுக்கும் தோல்விகளை தேவன் ஏன் அனுமதிக்கிறார் என்பதைக் கண்டறியுங்கள்.

"**விசுவாசத்தின் வீரியம் மீட்கப்பட்டது**" என்ற பாடம், மீண்டும் கலிலேயா கடற்கரைக்கு நம்மை அழைத்து சென்று, மீட்பின் மென்மையான சந்திப்பை வெளிப்படுத்துகிறது. கரி நெருப்பின் அருகில், இயேசு பேதுருவின் குற்ற உணர்வை நீக்கி, "என் ஆடுகளை மேய்ப்பாயாக" என்ற மூன்று மடங்கு பொறுப்பை அவருக்கு அளிக்கிறார். "கிழியாத வலையின்" முக்கியத்துவத்தையும் இயேசுவின் உரையாடலில் உள்ள அன்பின் நுணுக்கங்களையும் ஆராயுங்கள். நம் கர்த்தர் ஒரு நொறுங்கிய மனிதனை எவ்வாறு மீட்டெடுத்து, அவனுக்கு ஒரு புதிய, அசைக்க முடியாத வீரியத்தை அளிக்கிறார் என்பதைக் காணுங்கள்.

"**பேதுருவின் முழுமையான ஆவிக்குரிய முன்னேற்றம்**" என்ற பாடம், பெந்தெகொஸ்தே நாளில் பரிசுத்த ஆவியின் வெடித்தெழும் வல்லமையை எடுத்துக்காட்டுகிறது. இனி பயமின்றி, பேதுரு ஆயிரக்கணக்கானோருக்கு இரட்சிப்பின் கதவைத் தைரியமாகத் திறக்கிறார். புறஜாதியாரை ஏற்றுக்கொள்ளும்படி தேவன் பேதுருவின் ஆவிக்குரிய உணர்வுகளை எவ்வாறு மறுவடிவமைத்தார்? இந்தக் கட்டுரை, அவர் ஒரு முதிர்ந்த தலைவராக மாறியதைக் கொண்டாடுகிறது. அவருடைய மீட்பு ஒவ்வொரு விசுவாசியின் பயணத்திற்கும் ஒரு முன்மாதிரியாகும். "**ஒரு தொலைநோக்குப் பணி**" என்ற பாடம், முழுமையாக அர்ப்பணிக்கப்பட்ட ஒரு வாழ்வின் உச்சக்கட்டத்தை ஆராய்கிறது. உணர்ச்சிவசப்படும் சீஷரிலிருந்து, தன் நிருபங்களில் வரும்ஞானமுள்ள "மேய்ப்பர்" மற்றும் "மூப்பர் வரை, பேதுரு இனத்தாருக்கு வடிவம் கொடுத்த முன்மாதிரியை பின்பற்றுங்கள். அவர் இரத்தசாட்சியாக மரித்தபோது, சபை அதன் அழைப்பில் நம்பிக்கையுடன் நிலைத்திருக்க அவர் எவ்வாறு ஊக்குவித்தார்? தன் ஓட்டத்தை மகிழ்ச்சியுடன் முடித்த ஒரு மனிதனின் நிலைத்திருக்கும் சாட்சியால் உத்வேகம் பெறுங்கள்.

**மே / ஜூன் 2026,**
**தொகுப்பு 108, எண் 3**

**அப்போஸ்தலனாகிய பேதுரு** 2
அழைக்கப்பட்டவரும் தேர்ந்தெடுக்கப்பட்டவரும்

**விழிப்புணர்வும் ஆர்வமும்** 9
கிறிஸ்துவுக்குள்ளான முன்னேற்றம்

**பேதுருவின் அசைக்கமுடியாத வைராக்கியம்** 17
இயேசு பேதுருவைப் பார்த்தார்

**பேதுருவின் தனிப்பட்ட மனமடிவு** 24
வைராக்கியம் நல்லதுதான்

**விசுவாசத்தின் வீரியம் மீட்கப்பட்டது** 30
பேதுருவின் மீட்பு, நமது நம்பிக்கை

**பேதுருவின் முழுமையான ஆவிக்குரிய முன்னேற்றம்** 37
முற்போக்கான வாழ்க்கை

**ஒரு தொலைநோக்குப் பணி** 44
அப்போஸ்தலன் பேதுருவின் மேய்ப்பர் உச்சக்கட்டம்

## அழைக்கப்பட்டவர்களும் தெரிந்துகொள்ளப்பட்டவர்களும்
# அப்போஸ்தலனாகிய பேதுரு



"இயேசு கலிலேயாக் கடலோரமாய் நடந்துபோகையில், மீன் பிடிக்கிறவர்களாயிருந்த இரண்டு சகோதரராகிய பேதுரு என்னப்பட்ட சீமோனும், அவன் சகோதரன் அந்திரேயாவும், கடலில் வலைபோட்டுக்கொண்டிருக்கிறபோது, (மத்தேயு4:18)

— David Rice

யோனாவின் குமாரர்களான பேதுருவும் அந்திரேயாவும் (யோவான் 21:15)கலிலேயாக் கடலோரத்தில் மீனவர்களாக இருந்தனர். அவர்களுக்கு அருகில், செபெதேயு (மத்தேயு4:21) மற்றும் அவரது மனைவி சலோமியின் குமாரர்களான யாக்கோபும், யோவானும் இருந்தார்கள். {மத்தேயு 27:56 ஐ மாற்கு 15:20உடன் ஒப்பிடுவதன் மூலம், சலோமி, யோவான் மற்றும் யாக்கோபின் தாய் என்பது சுட்டிக்காட்டப்படுகிறது. "அவர்களில் மகதலேனா மரியாளும், யாக்கோபு மற்றும் யோசேயின் தாயான மரியாளும், செபதேயுவின் பிள்ளைகளின் தாயும் இருந்தனர், "என்று மத்தேயு எழுதுகிறார். "தூரத்தில் பார்த்துக் கொண்டிருந்த பெண்களும் இருந்தனர். அவர்களில் மகதலேனா மரியாளும், சிறிய யாக்கோபு மற்றும் யோசேயின் தாயான மரியாளும், சலோமியும் இருந்தனர்." என்று மாற்கு கூறுகிறார்.} இந்த இரண்டு சகோதர ஜோடிகளும் கூட்டாளிகளாக இருந்ததால், அவர்கள் ஒருவரையொருவர் அறிந்திருந்தனர் என்று லூாக்கா 1:5-10 விளக்குகிறது. {அந்த 12பேரில்,யாக்கோபு மற்றும் யூதா என்ற பெயருடைய மற்றொரு சகோதரர்களும் இருந்தனர். அவர்களே யாக்கோபு மற்றும் யூதா நிருபங்களின் ஆசிரியர்களாக இருந்தனர். மாற்கு 15:40ல் இந்த யாக்கோபு "சிறிய யாக்கோபு" என்று குறிப்பிடப்படுகிறார், ஒருவேளை அவர் யோவானின் சகோதரரான யாக்கோபை விடக் குள்ளமாக இருந்திருக்கலாம். இந்த "சிறிய யாக்கோபு" என்பவர்தான் எருசலேமில் உள்ள திருச்சபைக்கு மூப்பராகவும், தலைவராகவும் பணியாற்றிய அப்போஸ்தலர். புறஜாதியாராக மனமாறியவர்களைக் குறித்து எருசலேமில் நடைபெற்ற சங்கத்திற்குத் தலைமை தாங்கியவரும் இவரே. "அவர்கள் பேசி முடிந்தபின்பு, யாக்கோபு அவர்களை நோக்கி - சகோதரரே, எனக்குச் செவிகொடுங்கள்." (அப்போஸ்தலர் 15:13) இந்த யாக்கோபும் யூதாவும் மத்தேயு13:55 ல் இயேசுவின் உறவினர்களாகவும் குறிப்பிடப்படுகிறார்கள். "இவன் தச்சனின் குமாரன் அல்லவா ? இவனுடைய தாய் மரியாள் அல்லவா ? இவனுடைய சகோதரர்கள் யாக்கோபு, யோசே சீமோன், யூதா...." இங்கு சகோதரர்கள் என்ற சொல், உறவினர்களைக் குறிக்கும் ஒரு பொதுவான பொருளில் பயன்படுத்தப்பட்டுள்ளது என்பது தெளிவாகிறது. இவ்விஷயத்தில், பவுல் கலாத்தியர் 1:19ல், "கர்த்தருடைய சகோதரனாகிய யாக்கோபைத் தவிர, மற்ற அப்போஸ்தலர்களில் ஒருவரையும் நான் காணவில்லை" என்று கூறுகிறார். }

நான்கு மீனவர்கள் இரவு முழுவதும் பிரயாசப்பட்டும் எந்த பலனும் கிடைக்கவில்லை என்பதே லூக்காவின் கூற்றாக இருந்தது. மேலும் காலையில் அவர்கள் படகுகள் கரையில் இருந்தது. கேட்போரின் கூட்டத்தினரோடு உரையாற்றுவதற்காக, இயேசு அவர்களது படகுகளில் ஒன்றைப் பயன்படுத்துவதற்காக படகை கரையிலிருந்து சற்று தள்ளச் சொன்னார். தனது உரையை முடித்த பிறகு, இயேசு பேதுருவிடம் படகை ஆழத்திற்குச் செலுத்தி வலையை வீசுமாறு அறிவுறுத்தினார். அவர்கள் வலை கிழிந்து போகும் அளவுக்கு மிகுதியான மீன்களைப் பிடித்தனர். அவர்கள் உதவிக்காகத் தங்கள் கூட்டாளிகளை அழைத்தனர், இரண்டு படகுகளும் மூழ்கும் அளவுக்கு மீன்களால் நிரம்பியது. (லூக்கா5:7 )இந்த வியக்கத்தக்க நிகழ்விற்குப் பிறகு, இயேசு அந்த நான்கு பேரையும் தம்மைப் பின் தொடருமாறு அழைத்தார், அவர்களும் அவ்வாறே செய்தனர்.

இது இயேசுவுடன் அவர்களுக்கு ஏற்பட்ட முதல் சந்திப்பு அல்ல. பேதுரு, அந்திரேயா, யாக்கோபு மற்றும் யோவான் ஆகிய இந்த நான்கு சீஷர்களும் ஆரம்பத்தில் யோவான் ஸ்நானகனின் சீஷர்களாகவே

இயேசுவைச் சந்தித்தனர். இதைப் பற்றி யோவான் 1:34-43 இல் காணப்படுகிறது. {யோவான் 1:34-43 ல் உள்ள விவரிப்பில், அந்தச் சந்தர்ப்பத்தில் யாக்கோபு உடனிருந்தார் என்று குறிப்பிடவில்லை. இருப்பினும், சகோதரர்களான அந்திரேயாவும் பேதுருவும் உடனிருந்ததாலும், யோவான் 1:34-43ல் குறிப்பிடப்பட்டுள்ள இரண்டாவது சீஷர் அப்போஸ்தலனாகிய யோவான் என்பது தெளிவாகத் தெரிவதாலும், மேலும் அந்த நால்வரும் வியாபாரக் கூட்டாளிகளாக இருந்ததாலும், யோவானின் சகோதரரான யாக்கோபும் உடனிருந்திருக்க வாய்ப்புள்ளது.} ஆனால், இந்த மீன்பிடி அற்புதத்திற்குப் பிறகு, அவர்கள் தங்களது வழக்கமான மீன்பிடித் தொழிலை விட்டுவிட்டு இயேசுவுக்குப் பணிவிடை செய்யத் தொடங்கினார்கள் என்பது தெளிவாகிறது.

**பேதுருவின் தனித்தன்மை**

பேதுரு மிகவும் சுறுசுறுப்பானவராக இருந்தார். இயேசு உயிர்த்தெழுந்த பிறகு, அவர்கள் மீண்டும் கலிலேயாக் கடலில் இருந்தபோது, நுணுக்கமான அறிவுடைய யோவான், "அவர் கர்த்தர்" என்று கூறினார். உடனே, விரைந்து செயல்படும் குணம் கொண்ட பேதுரு, இயேசு நின்று கொண்டிருந்த கரையை நோக்கி நீந்துவதற்காகக் கடலில் குதித்தார். (யோவான் 21:7)இயேசுவின் சரீரம் காணவில்லை என்ற செய்தியுடன் மகதலேனா



மரியாள் காலியான கல்லறையிலிருந்து திரும்பி வந்தபோது, பேதுருவும் யோவானும் கல்லறையை நோக்கி ஓடினர். வயது குறைந்தவரான யோவான் முதலில் வந்து சேர்ந்தாலும், கல்லறையினுள் உற்றுப் பார்த்தார், ஆனால் அவரைத் தொடர்ந்து வந்த பேதுரு வந்தவுடனேயே நேரடியாக கல்லறைக்குள் நுழைந்தார்(யோவான் 20:1-8) எருசலேமுக்குத் தான் செல்லவிருப்பதைப் பற்றியும் அங்கு அவருக்கு மரணம் காத்திருப்பதைப் பற்றியும் இயேசு பேசிய போது, ஆவேசமான குணம் கொண்ட பேதுரு அவரைத் கடிந்துகொள்ளத் தொடங்கினார் - "ஆண்டவரே, இது உமக்கு நேரிடக் கூடாது, இது உமக்குத் தூரமாயிருப்பதாக" என்றார் (மத்தேயு16:22)

பேதுருவின் இந்த தனித்துவமானப் பண்பு, இயேசுவைப் பற்றிய சத்தியத்தை மற்றவர்களுக்கு எடுத்துரைப்பதில் அவரை ஒரு முன்னணி வலிமையாக மாற்றத் தூண்டியது. பெந்தெகொஸ்தே நாளில், பன்னிரண்டு சீஷர்களும் "எல்லாரும் பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டு, ஆவி தங்களுக்குத் தந்தருளின வரத்தின்படியே வெவ்வேறு பாஷைகளிலே பேசத்தொடங்கினார்கள். " (அப்போஸ்தலர் 2:4)

தேவாலயத்தில் கூடியிருந்த கூட்டத்தில் இருந்தவர்கள், இவர்கள் மது அருந்தியிருப்பதாகத் தவறாகக் கருதினார்கள். (அப்போஸ்தலர் 2:14 )அப்போது பேதுரு துணிச்சலுடன் முன்வந்து, "யூதேயா மனுஷரே, எருசலேமில் வாசம்பண்ணுகிற ஜனங்களே, நீங்களெல்லாரும் இதை அறிந்து, என் வார்த்தைகளுக்குச் செவிகொடுங்கள்" என்று கூறினார். அவர்கள் காண்பதும் கேட்பதும் பரிசுத்த ஆவியினால் உண்டானது என்று அவர் விளக்கினார். தொடர்ந்து, அவர் இயேசுவின் மரணம் மற்றும் உயிர்த்தெழுதலைப் பற்றி தனிச்சையாகவும் ஆற்றலுடனும் விளக்கினார். அவரது உரை எவ்வளவு வலிமையாக இருந்ததென்றால், அதைக் கேட்டவர்கள் "இருதயத்திலே குத்தப்பட்டவர்களாகி, பேதுருவையும் மற்ற அப்போஸ்தலரையும் நோக்கி -

சகோதரரே, நாங்கள் என்ன செய்யவேண்டும் ? " என்று கேட்டார்கள் (அப்போஸ்தலர் 2:37)அதன் விளைவாக, "அன்றைய தினம் ஏறக்குறைய மூவாயிரம் பேர் சேர்க்கப்பட்டார்கள்" (வசனம்41)

பின்னர், அப்போஸ்தலர் 3 - ஆம் அதிகாரத்தில், "பேதுருவும் யோவானும் ஜெபவேளையாகிய ஒன்பதாம் மணிநேரத்திலே தேவாலயத்திற்குப் போனார்கள்." அங்கே பிறவியிலேயே சப்பாணியாய் இருந்த ஒரு மனிதன் பிச்சை கேட்டுக்கொண்டிருந்ததைக் கண்டு, பேதுரு அவனிடம் பேசி அவனைச் சுகப்படுத்தினார். இந்தச் செயலால் அங்கிருந்த மற்றொரு கூட்டத்தினரின் கவனம் அவர் பக்கம் திரும்பியது, அப்போதும் பேதுரு தன்னிச்சையாக இயேசுவைப் பற்றிய செய்தியை அவர்களுக்கு வழங்கினார். இந்த உரை அப்போஸ்தலர் 3 - ஆம் அதிகாரத்தின் இறுதி வரை தொடர்கிறது. இதில் இயேசுவைப் பற்றிய மிகவும் குறிப்பிடத்தக்க வசனங்களில் ஒன்றும் அடங்கும் - "எல்லாம் நிறைவேறித் தீருங்காலங்கள் வருமளவும் பரலோகம் அவரை ஏற்றுக்கொள்ளவேண்டும்." (அப்போஸ்தலர் 3:21)

இதன் விளைவாக, எருசலேமில் இருந்து சகோதரர்களுடன் இன்னும் அதிகமான விசுவாசிகள் சேர்க்கப்பட்டனர். "வசனத்தைக் கேட்டவர்களில் அநேகர் விசுவாசித்தார்கள் - அவர்களுடைய எண்ணிக்கை ஏறக்குறைய ஐயாயிரமாயிருந்தது." (அப்போஸ்தலர் 4:4)ஆண்களைப் போலவே பெண்களும் சம எண்ணிக்கையில் இருந்தார்கள் என்று நாம் கருதினால், விசுவாசிகளின் எண்ணிக்கை பெந்தெகொஸ்தே நாளில் இருந்த 3, 000 - த்திலிருந்து சுமார் 10,000 ஆக உயர்ந்தது. ஆழ்ந்த அர்ப்பணிப்புள்ள ஓர் அப்போஸ்தலரின் வழியாக, சுவிசேஷத்தின் ஒரு பிரமிக்கத்தக்க தொடக்கமாக இது அமைந்தது.

## மூன்றாம் மற்றும் ஒன்பதாம் மணி நேரங்கள்

இந்த இரண்டு அனுபவங்களும் சுவிசேஷயுக பணிகளுக்கு ஒரு எழுச்சியூட்டும் தொடக்கமாகும். இவை சில தீர்க்கதரிசனப் பொருளையும் கொண்டிருக்கக்கூடும். இயேசு சிலுவையில் அறையப்பட்டபோது, அவர் மூன்றாம் மணிவேளையில் சிலுவையில் அறையப்பட்டார், ஒன்பதாம் மணிநேரத்தில் உயிர் விட்டார் - நமது நேரக் கணக்கின்படி இது காலை 9 மணி முதல் மாலை3 மணி வரை ஆகும். யூத விசுவாசிகளை நியாயப்பிரமாணத்தின் சாபத்திலிருந்து விடுவிப்பதற்காக இயேசு சிலுவையில் அறையப்பட்டார். (கலாத்தியர் 3:13, உபாகமம் 21:22)அதைத் தொடர்ந்து ஏற்பட்ட அவரது மரணம், ஆதாமுக்கும் அவரது சந்ததியினர் அனைவருக்கும் உரியதாக அமைந்தது. இதன் மூலம் இது புறஜாதி உலகத்தையும் உள்ளடக்கியது.

பெந்தெகொஸ்தே நாளன்று காலை 9 மணிக்கு பேதுரு ஆற்றிய உரை, யூத நேயர்களுக்கும் விசுவாசிகளுக்கும் மட்டுமே வழங்கப்பட்டது. அதன் பிறகு விரைவில், தேவாலயத்தில் மாலை3 மணிக்கு "தாயின் வயிற்றில் இருந்தே சப்பணியாய் பிறந்த "ஒரு மனுஷனை பேதுரு சுகப்படுத்தினார், இது"பாவத்தில் பிறந்த" ஆதாமையும் அவரது சந்ததியினரையும் (முழு புறஜாதி உலகத்தையும் ˙ உட்பட) நமக்கு நினைவூட்டுகிறது.சிலுவையில் இருந்த அந்த ஆறு மணிநேரம் (காலை9 மணி முதல் மாலை 3 மணி வரை), இந்த உலகத்தின் 6000 ஆண்டு கால பாவத்தையும் மரணத்தையும் நமக்கு நினைவூட்டுகிறது, இதிலிருந்து நம்மை மீட்பதற்காகவே இயேசு மரித்தார்.மேலும், இந்த நேரங்கள் தேவாலயத்தில் நடைபெறும் காலை மற்றும் மாலை பலி செலுத்தும் நேரங்களோடும் ஒத்துப்போகின்றன.

## எதிர்ப்பும் துன்புறுத்தலும்

அப்போஸ்தலர் 3ஆம் அதிகாரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள பேதுருவின் இரண்டாவது பொது உரை, யூதத் தலைமையின் தீவிரமான ஒடுக்குமுறைக்கு வழிவகுத்தது. "ஆசாரியர்களும், தேவாலயக் காவற்காரர் தலைவனும், சதுசேயர்களும்.... அவர்கள் ஜனங்களுக்குப் போதித்ததினிமித்தமும், இயேசுவை முன்னிட்டு மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுதலைப்

பிரசங்கித்ததினிமித்தமும் மிகுந்த கோபங்கொண்டு."(அப்போஸ்தர் 4:1, 2 ) அவர்கள் பேதுருவையும் யோவானையும் கைது செய்து, அன்று இரவு முழுவதும் அவர்களைக் காவலில் வைத்தார்கள். (அப்போஸ்தலர் 4:3).மறுநாள் அவர்களைக் கடிந்து கொள்வதற்காக வந்தவர்களில் "பிரதான ஆசாரியனாகிய அன்னாவும், காய்பாவும்" இருந்தனர். (அப்போஸ்தலர் 4:6) கெத்செமனே தோட்டத்தில் இயேசு கைது செய்யப்பட்ட பிறகு அவரை எதிர்கொண்ட இரண்டு யூதத் தலைவர்கள் இவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

அவர்கள் அந்தத் தலைவர்கள் மற்றும் அங்குக் கூடியிருந்த மற்றவர்களுக்கு முன்பாக நின்றபோது, "பேதுரு பரிசுத்த ஆவியினால் நிறைந்து அவர்களை நோக்கி - ஜனத்தின் அதிகாரிகளே, இஸ்ரயேலின் மூப்பர்களே, பிணியாளியாயிருந்த இந்த மனுஷனுக்குச் செய்யப்பட்டஉபகாரத்தைக் குறித்து, எதினால் இவன் ஆரோக்கியமானான் என்று நீங்கள் இன்று எங்களிடத்தில் விசாரணை செய்தால், உங்களால் சிலுவையில் அறையப்பட்டவரும், தேவனால் மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டவருமான நசரேயனாகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலேயே இவன் உங்களுக்கு முன்பாக ஆரோக்கியமாய் நிற்கிறான் என்று உங்களுக்கும் இஸ்ரயேல் ஜனங்கள் அனைவருக்கும் தெரிந்திருக்கட்டும்" என்று கூறினார். (அப்போஸ்தலர் 4:8-10) அவர் தொடர்ந்து பேசிய போது, "பேதுரு



மற்றும் யோவானின் தைரியத்தை அவர்கள் கண்டார்கள்."

அந்த அற்புதத்தை அந்தத் தலைவர்களால் மறுக்க முடியவில்லை, ஏனெனில் "சுகமடைந்த அந்த மனுஷன் நாற்பது வயதுக்கு மேற்பட்டவனாயிருந்தான். (வசனம் 21)எனவே, அவர்கள் அந்த இரண்டு கைதிகளையும் மிரட்டி, இயேசுவின் நாமத்தைக் குறித்துப் போதிப்பதை நிறுத்தும்படி கட்டளையிட்டார்கள் (அப்போஸ்தலர் 4:17, 18 )அதற்குப் பேதுருவும் யோவானும், "நாங்கள் கண்டவைகளையும் கேட்டவைகளையும் பேசாமலிருக்க முடியாது" என்று பதிலளித்தார்கள். "அவர்கள் அவர்களை இன்னும் அதிகமாய் மிரட்டி, ஜனங்களுக்குப் பயந்து அவர்களைத் தண்டிப்பதற்கு வழியொன்றும் காணாமல் விட்டுவிட்டார்கள். (வசனங்கள் 20, 21)

**பேதுருவின் செல்வாக்கு தொடர்கிறது**

பேதுரு மற்றும் யோவானைத் தவிர மற்ற சீஷர்களுக்கும் துன்புறுத்தல் அதிகரித்தது என்று அப்போஸ்தலர் 5ம் அதிகாரம் காட்டுகிறது. ஏனெனில், "அப்போஸ்தலருடைய கைகளினாலே அநேக அடையாளங்களும் அற்புதங்களும் ஜனங்களுக்குள்ளே செய்யப்பட்டது, எல்லாரும் ஒருமனப்பட்டுச் சாலொமோனுடைய மண்டபத்திலிருந்தார்கள் (அப்போஸ்தலர் 5:12)இருப்பினும், பேதுரு தொடர்ந்து ஒரு முக்கியப்



பங்கை வகித்தார். "பேதுரு நடந்து போகையில் அவருடைய நிழலாவது அவர்களில் சிலர்மேலும் படும்படிக்கு, பிணியாளிகளை வீதிகளில் கொண்டுவந்து ... வைத்தார்கள். (அப்போஸ்தலர் 5:15)

துன்புறுத்தல் தொடர்ந்து நீடித்தது. இந்தச் சந்தர்ப்பத்தில், அவர்கள் இன்னும் அதிகமான சீஷர்களைக் கைது செய்து, பொதுவாக செய்யப்பட்ட இந்த பணிகளை நிறுத்தும்படி மீண்டும் கட்டளையிட்டார்கள். யூதத் தலைவர்களில் ஒருவரான கமாலியேல் என்னும் பரிசேயர், இந்த புதிய இயக்கத்திற்கு எதிராக மிகவும் கடுமையாகச் செயல்பட வேண்டாம் என்று ஆலோசனைச் சங்கத்தினரை எச்சரித்தார். இது தேவனால் உண்டாகாதிருந்தால் அது தானாகவே அழிந்து போகும், இல்லையெனில், அவர்கள் தேவனுக்கு விரோதமாய்ப் போர் செய்கிறவர்களாவார்கள் என்று அவர் குறிப்பிட்டார். (அப். 5 : 39)ஆலோசனை சங்கம் இந்த நல்ல ஆலோசனையை ஏற்றுக்கொண்டாலும், அந்த சீஷர்களை அவர்கள் அடிக்காமல் விடவில்லை. (வசனம்40)இதன் விளைவாக, சீஷர்கள் "அவருடைய நாமத்திற்காகத் தாங்கள் அவமானமடைவதற்குப் பாத்திரராக எண்ணப்பட்டபடியினால் சந்தோஷமாய்ப் போனார்கள். தினந்தோறும் தேவாலயத்திலேயும் வீடுகளிலேயும் இடைவிடாமல் போதகம் பண்ணி, இயேசுவே கிறிஸ்துவென்று பிரசங்கித்தார்கள். "(வசனங்கள்41,42)

அப்போஸ்தலர் 4 ஆம் அதிகாரத்தில், கிறிஸ்தவர்களின் எண்ணிக்கை சுமார் 10, 000 - ஆக அதிகரித்ததை நினைவுகூரலாம். இந்த வளர்ச்சி தொடர்ந்து நீடித்ததை அப்போஸ்தலர் 5:14உறுதிப்படுத்துகிறது. திரளான புருஷர்களும் ஸ்திரீகளும் விசுவாசமுள்ளவர்களாகக் கர்த்தரிடத்தில் அதிகமதிகமாய்ச் சேர்க்கப்பட்டார்கள். அதாவது, முந்தைய எண்ணிக்கையையும் தாண்டித் திரளான ஜனங்கள் வந்து இணைந்தனர். இது கிறிஸ்தவ விசுவாசத்தின் ஒரு வியக்கத்தக்க பரவலாகும். இந்த வளர்ச்சியில் பலர் பங்கெடுத்த போதிலும், பேதுரு ஒரு எழுச்சியூட்டும் தலைவராகவேத் திகழ்ந்தார்.

**பெயர் மாற்றம்**

ஏசாயா 62:2, 65:15 மற்றும் வெளிப்படுத்துதல் 2:17 ஆகிய வசனங்களில், பரலோக அழைப்பைப் பெற்றவர்களுக்கு ஒரு "புதிய நாமம் வழங்கப்படுவதைக் குறித்த குறிப்புகள் இருப்பது மிகவும் சுவாரஸ்யமானது. இது மகிமையில் இருக்கும் பரிசுத்தவான்களுக்கு வழங்கப்படும் ஒரு விவரமான அடையாளத்தைக் (descriptive identification) குறிப்பதாகத் தெரிகிறது. இந்த நாமம் அவர்களுடைய குணாதிசயங்கள் மற்றும் அனுபவங்களின் தன்மையோடு தொடர்புடையதாக அமைந்தது.

அந்திரேயா பேதுருவை இயேசுவிடம் அறிமுகப்படுத்தியபோதே, பேதுரு ஒரு புதிய நாமத்தைப் பெற்றார். "இயேசு அவனைப் பார்த்து - நீ யோனாவின் குமாரனாகிய சீமோன், நீ கேபா என்னப்படுவாய் என்று சொன்னர், கேபா என்பதற்குப் பாறை (கல்) என்று அர்த்தமாம்" (யோவான் 1:42 ).பேதுரு சீஷர்களுக்கு இடையே ஒரு வழிகாட்டும் ஒளியாக (leading light) திகழ்வார் என்பதை இயேசு ஆரம்பத்திலேயே தேவ ஆவியின் மூலம் அறிந்திருந்தார். பெந்தெகொஸ்தே நாள் முதல் அவர் அவ்வாறே விளங்கினார்.

பேதுரு தனது விசுவாசத்தை மிகுந்த ஆர்வத்தோடும் வைராக்கியத்தோடும் வெளிப்படுத்தும் இயல்புடையவராக இருந்தார். இயற்கையிலேயே அவ்வளவு ஆர்வம் இல்லாத நமக்கு, விசுவாசத்தில் முன்னோக்கிச் செல்லவும், அதற்கேற்பச் செயல்படவும் ஊக்கமளிக்கும் ஒரு உதாரணமாக அவர் திகழ்கிறார். இயேசுவின் மற்ற சீஷர்களும் பேதுருவின் வழிநடத்துதலைப் பின்பற்றி, கிறிஸ்துவுக்கு வியக்கத்தக்க சாட்சிகளாக (remarkable testimonies)மாறினார்கள்.

அப்போஸ்தலர் 6 - ஆம் அதிகாரம், வளர்ந்து வரும் பெரிய கிறிஸ்தவ ஐக்கியத்திற்குப் பணிவிடை செய்ய உதவுவதற்காக ஏழு உதவிக்காரர்கள் தேர்ந்தெடுக்கப்படுவதோடு தொடங்குகிறது. அந்த

ஏழு பேரில் முதலில் குறிப்பிடப்பட்டவர் ஸ்தேவான் (அப்போஸ்தலர் 6:5) இரண்டாவது பிலிப்பு. இருவருமே திறமைமிக்க பேச்சாளர்களாகவும், தங்களுக்குக் கிடைத்த வாய்ப்புகளை உண்மையாகப் பயன்படுத்திக் கொள்பவர்களாகவும் இருந்தனர்.

ஸ்தேவான் கிறிஸ்துவுக்காகப் பொது இடங்களில் சாட்சி பகிர்வதில் மிகுந்த ஆற்றலும் செல்வாக்கும் கொண்டிருந்தார். அதன் காரணமாகவே, அவர் யூதத் தலைவர்களின்" ஆலோசனைச் சங்கத்திற்கு" முன்பாகக் கொண்டுவரப்பட்டுக் குற்றம் சாட்டப்பட்டார். அந்தச் சங்கத்தின் முன் ஸ்தேவான் ஆற்றிய நீண்ட உரையை அப்போஸ்தலர் 7 - ஆம் அதிகாரம்,பதிவு செய்துள்ளது. இது அப்போஸ்தலர் புத்தகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள மற்றெந்த உரைகளையும் விட நீண்டதாகும். அவர் தொடர்ந்து பேசிக்கொண்டிருந்தபோது, 54 - ஆம் வசனத்தில் உள்ளபடி, அதைக் கேட்டவர்கள் "இருதயத்தில் குத்தப்பட்டு, அவரைப் பார்த்துப் பற்கடித்தார்கள்." இது அவர் கல்லெறியப்பட்டு மரிப்பதற்கும் முதல் கிறிஸ்தவ இரத்தசாட்சியாக மாறுவதற்கும் வழிவகுத்தது.அந்தச் சமயத்தில் அங்கிருந்த தர்சு பட்டணத்தானாகிய சவுல் (அவர் கல்லெறியவில்லை என்றாலும்), ஒரு வகையில் ஸ்தேவானின் வைராக்கியமான சேவைக்கு ஒரு மாற்றாக அமைந்தார். "பின்னர், உதவிக்காரனாகிய பிலிப்பு எத்தியோப்பிய மந்திரிக்கு உதவப் பயன்படுத்தப்பட்டார்.அதற்கும் பிறகு, பிலிப்புவின் நான்கு குமாரத்திகளும் திறமையான தொகுப்பாளர்களாக இருந்தனர் என்பது தெளிவாகத் தெரிந்தது. "அவனுக்குத் தீர்க்கதரிசனம் சொல்லுகிற (பேசுகிற) கன்னிகைகளாகிய நான்கு குமாரத்திகள் இருந்தார்கள்." (அப்போஸ்தலர் 21:9)

யோவானின் மூத்த சகோதரரான யாக்கோபும் தனது ஊழியத்தில் மிகுந்த பலன் தருபவராகவும் வைராக்கியம் உள்ளவராகவும் இருந்தார். இதனால்தான், பிற்காலத்தில் ஏரோது இராஜா (முதலாம் ஏரோது அகிரிப்பா) "சபையிலே சிலரைத் துன்பப்படுத்தத் தொடங்கி, யோவானுடைய சகோதரனாகிய யாக்கோபைப் பட்டயத்தினால் கொன்றான்" (அப்போஸ்தலர் 12:1, 2)இதற்கு முன்பாக, கி. பி 41 முதல் 54 வரை ஆட்சி செய்த கிலவுதியு ராயனின் நாட்களில் ஏற்பட்ட ஒரு பஞ்சத்தைப் பற்றி அப்போஸ்தலர் 11:28 குறிப்பிடுகிறது. இதிலிருந்து, 12 - ஆம் அதிகாரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள யாக்கோபின் மரணம் கி.பி 41 க்கு முன்னதாக இருக்க முடியாது என்பது தெரிகிறது. அப்போஸ்தலர் 12 - ஆம் அதிகாரம் இந்த ஏரோதின் மரணத்துடன் முடிவடைகிறது. இது கி.பி 44- இல் நிகழ்ந்தது. எனவே, யாக்கோபு இரத்தசாட்சியாக மரித்தது அதே ஆண்டில்தான் (கி. பி44) நிகழ்ந்திருக்க வேண்டும் என்று தோன்றுகிறது. இது கி.பி 33 - இல் நிகழ்ந்த இயேசுவின் மரணத்திற்கு 11 ஆண்டுகளுக்குப் பிறகு நடந்திருக்கவேண்டும்.

இந்த யாக்கோபு முதலில் குறிவைக்கப்பட்டார் என்பது, கிறிஸ்துவுக்காகப் பொது ஜனங்களிடையே அவருக்கும் ஒரு தீவிரமான செல்வாக்கு இருந்தது என்பதைக் காட்டுகிறது. அவருடைய மரணம் "யூதர்களுக்குப் பிரியமாயிருந்தது" (அப் 12:3)என்ற உண்மை, அவர் ஊக்கமுள்ளவராகவும், திறமைசாலியாகவும், தமது செல்வாக்கிற்காக நன்கு அறியப்பட்டவராகவும் இருந்தார் என்பதை உணர்த்துகிறது.

அடுத்து ஏரோது, பேதுருவுக்கும் அதே கதியை உண்டாக்கும் நோக்குடன் அவரைச் சிறைபிடித்தான். இருப்பினும், ஒரு தேவதூதரின் தலையீட்டால் பேதுரு விடுவிக்கப்பட்டார். அவருடைய ஊழியம் காப்பாற்றப்பட்டு, வரவிருக்கும் பல ஆண்டுகளுக்குத் தொடர அனுமதிக்கப்பட்டது. ரோமில் அவருடைய மரணத்தைப் பற்றிய கிறிஸ்தவ அறிக்கைகள் உண்மையானவை என்று கருதுவோமானால், பேதுரு சிலுவையில் அறையப்பட்டு இறந்தார். பேதுரு தனது ஓட்டத்தை எவ்வாறு முடிப்பார் என்பது குறித்து இயேசு கூறியதாக அப்போஸ்தலனாகிய யோவான் பதிவு செய்துள்ளவற்றுடன் இது ஒத்துப்போகிறது. "நீ முதிர்வயதுள்ளவனாகும் போது உன் கைகளை நீட்டுவாய், வேறொருவன் உன் அரையைக் கட்டி,

உனக்கு இஷ்டமில்லாத இடத்துக்கு உன்னைக் கொண்டுபோவான் ... இன்னவிதமான மரணத்தினாலே அவன் தேவனை மகிமைப்படுத்தப் போகிறானென்பதைக் குறிக்கும்படியாக இப்படிச் சொன்னார்." (யோவான் 21:18, 19)பேதுருவின் நல்ல நண்பரான அப்போஸ்தலன் யோவான் இந்த வார்த்தைகளை எழுதிய சமயத்தில், பேதுருவின் ஊழியம் முடிவடைந்திருக்கும்.

### ஸ்தேவான், யாக்கோபு, பேதுரு, பவுல்

முதல் கிறிஸ்தவ இரத்தசாட்சியான ஸ்தேவான், யூதத் தலைவர்களால் கொல்லப்பட்டார். முதல் அப்போஸ்தலரின் இரத்தசாட்சியான யாக்கோபு, ரோமானிய ஆட்சியாளரான ஏரோது மன்னனால் கொல்லப்பட்டார். பேதுரு அற்புதமாக விடுவிக்கப்பட்டார், அதைத் தொடர்ந்து ஏரோது தாக்கப்பட்டார், பவுல் பின்னர் கல்லெறியப்பட்டபோதிலும் தனது முதல் மிஷனரி பயணத்தின் இறுதிக் கட்டத்தில் உயிர் தப்பினார். (அப்போஸ்தலர் 14:19, 20)

திருச்சபையின் முதல் காலகட்டத்தில் கிறிஸ்தவர்களின் பிரதான எதிரி, யூதத் தலைமையாக இருந்தது என்பதை நாம் ஒப்பீட்டு ரீதியாகக் காண்கிறோம். (மத்தேயு23:34, 35) இரண்டாம் காலகட்டத்தில் திருச்சபையின் பிரதான எதிரி ரோமானியப் பேரரசாக இருந்தது. (வெளிப்படுத்துதல் 2:10) திருச்சபையின் மூன்றாம் காலகட்டத்தில், கிறிஸ்தவத் தாயைக் கொண்ட கான்ஸ்டன்டைன் மற்ற புறச்சமய ஆட்சியாளர்களை வெளியேற்றி ரோமானியப் பேரரசைக் கைப்பற்றியபோது, பரிசுத்தவான்கள் கடுமையான துன்புறுத்தல்களிலிருந்து விடுபட்டனர்.




இந்த வகையில், ரோமானிய துன்புறுத்தலின் "இரும்பு வாசல்" பணிந்தது. திருச்சபையின் நான்காம் காலகட்டமான தியத்தீராவில்,போப் அமைப்பின் கீழ் திருச்சபையின் மிகக் கொடிய துன்பங்களான "யேசபேலின்" காலம் வந்தது, அதில் இலட்சக்கணக்கான கிறிஸ்தவர்கள் தங்கள் உயிர்களை இழந்தனர்.

ஒருவேளை, மேலே குறிப்பிடப்பட்ட ஸ்தேவான், யாக்கோபு, பேதுரு, பவுல் ஆகிய உன்னத முன்மாதிரிகள், சுவிசேஷ யுகத்தின் முதல் நான்கு கட்டங்கள் வழியாகத் திருச்சபை வளர்ச்சி அடையும்போது என்ன நடக்கும் என்பதற்கான தீர்க்கதரிசன அடையாளங்களாக இருந்திருக்கலாம். அந்த யுகத்தின் முதல் மற்றும் இரண்டாம் காலகட்டங்களுக்கு ஏற்ப, ஸ்தேவான் மற்றும் யாக்கோபு கொல்லப்பட்டனர். பேதுரு தப்பிப்பிழைத்தார், இது துன்புறுத்தலுக்கு ஒரு தற்காலிக முடிவைக் குறித்தது. பவுல் கல்லெறியப்பட்டார், இது போப்பமைப்பின் அதிகாரத்தின் கீழ் மீண்டும் துன்புறுத்தல் தொடங்கியதைச் சுட்டிக்காட்டியது.

## கிறிஸ்துவுக்குள் முன்னேறுதல்

# விழிப்புணர்வும் ஆர்வமும்



— Micah Hess

"சீமோன் பேதுரு பிரதியுத்தரமாக - நீர் ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்றான்." (மத்தேயு16:16)

ஆவிக்குரிய விழிப்பு அல்லது எழுதல் என்பது, இதற்கு முன் அனுபவிக்காத வகையில் கண்களும் இருதயமும் திறக்கப்படும் ஒரு ஆவிக்குரிய விழிப்புணர்வின் தருணம் ஆகும். சிலருக்கு, குறிப்பாக உலகத்துயிலிருந்தும் பாவ வாழ்க்கையிலிருந்தும் அழைக்கப்பட்டவர்களுக்கு, உறக்கத்திற்கும் விழிப்புக்கும் இடையிலான வேறுபாடு தெளிவாகப் புலப்படும்.

ஆயினும், அன்பான கிறிஸ்தவக் குடும்பங்களில் வளர்க்கப்பட்டவர்கள் கூட, தேவன் தங்கள் இருதயங்களைத் தூண்டி, ஆவிக்குரிய காரியங்கள் மீது ஒரு புதிய அன்பினால் தங்களை நிரப்பிய ஒரு தருணத்தை அவர்களால் நினைவுகூர முடியும். பேதுரு இந்தச் செயல் முறையின் ஒருவலுவான சித்திரத்தை அளிக்கிறார்.

நியாயப்பிரமாண உடன்படிக்கையின் கீழ் வளர்க்கப்பட்டு, பின்னர் கிறிஸ்துவால் உருமாற்றப்பட்ட அவருடைய வாழ்க்கை, ஒரு உண்மையான ஆவிக்குரிய எழுச்சி எப்படி இருக்கும் என்பதை வெளிப்படுத்துகிறது - அது படிப்படியாக, கடவுளால் வழிநடத்தப்பட்டு, இறுதியில் வாழ்க்கையையே மாற்றக்கூடியதாக இருக்கும்.

### பேதுருவின் விசுவாசம்

பேதுருவை ஒரு உண்மையான ஆவிக்குரிய விழிப்புக்குள் வழிநடத்த தேவனால் முடிந்ததற்கு ஒரு காரணம், அவருடைய ஆழமான விசுவாசமே. சீஷத்துவத்தின் ஆரம்ப நாட்களிலிருந்தே, பேதுருவுக்குப் புரியாதபோதும் இயேசுவை நம்புவதற்கான விருப்பத்தை அவர் காட்டினார்.



ஒருமுறை, மீன் பிடித்து பலனளிக்காத ஒரு இரவுக்குப் பிறகு, இயேசு பேதுருவிடம் மீண்டும் வலைகளைப் போடுமாறு கூறினார். மீன் பிடிபடுவதற்கான வாய்ப்பு மிகவும் குறைவு என்ற போதிலும், பேதுரு கீழ்ப்படிந்தார். (லூக்கா5:1-11 ).உண்மையான கீழ்ப்படிதலின் அந்த எளிய செயல், வலைகள் நிரம்பி வழிந்த, அதிசயத்திற்கான கதவைத் திறந்தது, அது கிறிஸ்துவுடனான பேதுருவின் பயணத்தை வடிவமைக்கவிருந்த ஒரு முன்மாதிரியை அமைத்தது.

பேதுருவுக்கு நடந்த அந்த அற்புதம் நமக்கும் ஒரு செய்தியைக் கூறுகிறது. கடவுள் நம்மிடம் கண் மூடித்தனமான நம்பிக்கையைக் கோருவதில்லை, ஆனால் சில நேரங்களில் அவருடைய காரணங்கள் மறைக்கப்பட்டிருக்கும் போது கீழ்ப்படியுமாறு அவர் நம்மை அழைக்கிறார். அந்த தருணங்களில், முன்னால் உள்ள பாதை மறைக்கப்பட்டிருந்தாலும், ஆண்டவரின் வழிநடத்தலைப் பின்பற்றுவதற்கான நமது விசுவாசத்தின் உறுதி நம்மைப் பின்தொடர கட்டாயப்படுத்த வேண்டும்.

### தெய்வீக ஆற்றலைக் கற்றல்

பேதுருவின் விசுவாசம் அவரது ஆவிக்குரிய விழிப்புணர்வின் ஆரம்பம் மட்டுமே. அவரது விசுவாசம் அவரை இயேசுவைப் பின்பற்ற வழிநடத்திய அதே வேளையில், திரளான மீன்கள் பிடிபட்ட அந்த அற்புதம், இயேசுவுக்கு இருந்த தெய்வீக அதிகாரத்தையும் வல்லமையையும் அவருக்கு வெளிப்படுத்தியது. இந்த ஆற்றல் விரைவில்

பொதுவெளியிலும், பேதுருவின் சொந்த வாழ்க்கையைத் தொட்ட ஆழமான தனிப்பட்ட தருணங்களிலும் வெளிப்பட்டது.

## பேதுருவின் இல்லத்தில் தெய்வீக வல்லமை

மற்றொரு வலிமையான தருணத்தில், இயேசு பேதுருவின் வீட்டிற்குள் நுழைந்தபோது, அவருடைய மாமியார் கடுமையான காய்ச்சலால் அவதிப்படுவதைக் கண்டார். அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க, அவர் அந்த நோயைக் அதட்டினார், உடனடியாக அவள் குணமடைந்தாள்



(லூக்கா 4:38-39)கூட்டத்தினரிடமிருந்தும் கவனத்தினரிடமிருந்தும் வெகு தொலைவில் இருந்த அந்த அமைதியான, தனிமையான தருணத்தில், இயேசுவின் அதிகாரம் பிரம்மாண்டமான அடையாளங்களுக்காக மட்டும் ஒதுக்கப்பட்டதல்ல என்பதைப் பார்க்கும் வரம் பேதுருவுக்கு அளிக்கப்பட்டது. கிறிஸ்து தனிநபர்கள் மீதும், அதாவது பேதுருவின் சொந்த குடும்பத்தினர் மீதும் அக்கறைகாட்டினார். இந்த இரக்கச் செயல், தான் பல சீஷர்களில் ஒருவன் மட்டுமல்ல, இயேசுவால் தனிப்பட்ட முறையில் அறியப்பட்டவன் மற்றும் நேசிக்கப்பட்டவன் என்பதை பேதுருவுக்கு உணர்த்தியிருக்க வேண்டும்.

## கூட்டத்தில் வெளிப்பட்ட தெய்வீக வல்லமை

பன்னிரண்டு ஆண்டுகளாக இரத்தப்போக்கினால் அவதிப்பட்டு வந்த ஒரு பெண், இயேசுவின் வஸ்திரத்தின் ஓரத்தைத் தொடுவதற்காக கூட்டத்திற்குள் புகுந்து சென்றாா். அவளுடைய விசுவாசம் வெளிப்படாமல் இருந்தபோதிலும், அவளுக்கு உடனடியாக சுகம் கிடைத்தது. இயேசு அவளை முன்னே வரும்படி அழைத்தபோது, அவர் பயத்துடன் உண்மையை ஒப்புக்கொண்டார், ஆனால் இயேசு அவளைத் தேற்றி, அவளுடைய விசுவாசத்தை உறுதிப்படுத்தி, அவளைச் சமாதானத்தோடு அனுப்பி வைத்தார். (மாற்கு5:22-34)திரளான ஜனங்கள் சூழ்ந்திருந்த போதிலும், இயேசு அந்தத் தனிநபரை கவனித்தார். பேதுரு இயேசுவின் தெய்வீக வல்லமையைத் தனிப்பட்ட முறையில் கண்ட மற்றுமொரு விலைமதிப்பற்ற தருணம் இதுவாகும்

## சீஷர்களுக்கு அளிக்கப்பட்ட அதிகாரம்

பேதுரு தனது பங்களிப்பின் மூலம் தெய்வீக வல்லமை என்பது தனிப்பட்டது என்பதை உணர்ந்தார் (மாற்கு 3:13-16 மற்றும் மத்தேயு10:1)வியாதிகளைக் குணமாக்கவும், பிசாசுகளைத் துரத்தவும், சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கவும் இயேசு சீஷர்களுக்கு அதிகாரத்தை வழங்கினார். அவர்களுடைய கீழ்ப்படிதலின் மூலம் செயல்படும் கடவுளின் வல்லமையை அனுபவித்தது, அற்புதங்களைக் காண்பதால் மட்டும் ஒருபோதும் அடைய முடியாது என்பதை அறிந்த பேதுரு, கிறிஸ்துவைப் பற்றிய அவரது புரிதலை ஆழப்படுத்தியது!

## நோக்கம் மற்றும் இலக்கைக் கற்றல்

குணமாக்கும் கடவுளின் வல்லமையை பேதுரு கண்ட பிறகு, இயேசு அந்த வல்லமையை

அவருக்குள் வடிவமைக்கத் தொடங்கினார். தனது அர்ப்பணிப்புள்ள வாழ்க்கையின் மூலம், ஒரு குறிப்பிட்ட நோக்கம் மற்றும் இலக்குடன் வாழ்வதன் வலிமையை இயேசு பேதுருவுக்குக் காட்டினார்.

இயேசு தனது ஊழியத்தை ஒருபோதும் மறைவானதாகவோ அல்லது செயலற்றதாகவோ இருக்க அனுமதிக்கவில்லை.இயேசு புகழைத் தேடவில்லை என்றாலும், சிலுவை வரை சென்று தனது பரலோகத் தந்தையின் சித்தத்தை உண்மையாக நிறைவேற்றினார். அங்கே அவர் அனைவருக்காகவும் தனது உயிரையே மீட்கும் பொருளாகக் கொடுத்தார்.

அவருடைய முழு ஊழியமும் அவருடைய இந்த அறிவிப்பில் வெளிப்படுத்தப்பட்டது - "மனுஷகுமாரனும் ஊழியங்கொள்ளும்படி வராமல், ஊழியஞ்செய்யவும், அநேகரை மீட்கும் பொருளாகத் தன் பிராணனைக் கொடுக்கவும் வந்தார்" (மாற்கு10:45)கடவுளுடைய இராஜ்யத்தில் உண்மையான மேன்மை என்பது மகிமையிலோ அல்லது பதவியிலோ இல்லை, மாறாக தாழ்மையான ஊழியத்தில் தான் உள்ளது என்பதை இயேசுவின் கீழ்ப்படிதல் காட்டியது. இயேசுவோடு நெருக்கமாக இருந்ததன் மூலம் பேதுருவின் விழிப்புணர்வும் ஆர்வமும் விரைவாக வளர்ந்தன, இது நாம் பின்பற்றுவதற்கு ஒரு முக்கியமான முன்மாதிரியாகும்.

கடவுளுடைய அழைப்பு என்பது பாவத்திலிருந்து மீட்கப்படுவது மட்டுமல்ல, அது ஒரு நோக்கத்திற்காக அழைக்கப்படுவது என்பதையும் பேதுரு படிப்படியாக உணர்ந்தார். பின்னர் பவுல் எழுதியது போல, "அவர் நம்முடைய செய்கைகளின்படி நம்மை இரட்சிக்காமல், தம்முடைய தீர்மானத்தின்படியும், உலகம் தோன்றுவதற்கு முன்னே கிறிஸ்து இயேசுவுக்குள் நமக்கு அளிக்கப்பட்ட கிருபையின்படியும், நம்மை இரட்சித்து, பரிசுத்த அழைப்பினால் நம்மை அழைத்தார்" (2தீமோத்தேயு1:9) சுவிசேஷ காலத்தில் மீட்கப்படுவது என்பது வாழ்க்கையில் ஒரு நோக்கத்தையும் இலக்கையும் பெறுவதாகும் என்பதை பேதுரு தனது விசுவாசமான முன்மாதிரியின் மூலம் நமக்குக் கற்பித்தார். 1

எதிர்ப்புகளுக்கு மத்தியிலும், தேவன் தமக்கு நியமித்த நோக்கம் மற்றும் இலக்கின் மீதுள்ள விசுவாசத்தினால் பலப்படுத்தப்பட்டு,இயேசு தமது பணியில் முன்னேறிச் சென்றார். பேதுரு விசுவாசத்தில் முதிர்ச்சியடைந்தபோது, ஒரு நோக்கத்துடன் கூடிய வாழ்க்கையை வாழ்வதில் தான் பலம் அடங்கியுள்ளது என்பதை அவரும் கற்றுக்கொண்டார்.இந்த அனுபவங்களின் மூலம், ஆவிக்குரிய அதிகாரம் என்பது அந்தஸ்திலிருந்து வருவதல்ல, மாறாக கடவுளின் சித்தத்திற்கு நம்மை அர்ப்பணிப்பதிலிருந்தே (கீழ்ப்படிவதிலிருந்தே) உருவாகிறது என்பதை அவர் உணர்ந்தார்.

இந்த உண்மை இன்றும் மிக முக்கியமானதாக இருக்கிறது.கடவுள் நமது இரட்சிப்பின் வடிவமைப்பாளர் மட்டுமல்ல, அவர் நமக்கு ஒரு அழைப்பையும் வழங்குகிறார். பாவத்திற்கு அடிமையாவதையே சுதந்திரம் என்று உலகம் தவறாகப் புரிந்து கொள்ளும் இந்தச் சூழலில், உண்மையான விடுதலை என்பது கடவுளுக்குச் சேவை செய்வதிலும், அவருடைய நித்திய நோக்கத்தால் வடிவமைக்கப்பட்ட வாழ்க்கையை வாழ்வதிலும் தான் உள்ளது என்பதை பேதுருவின் பயணம் நமக்கு நினைவூட்டுகிறது.

## கிறிஸ்துவை அறிந்துகொள்ளவும் அவர்மேல் வாஞ்சை கொள்ளவும் கற்றல்

இயேசுவின் மேல் எப்படி பேதுரு வாஞ்சைக் கொண்டார் என்பதே பேதுருவின் பயணத்தில் மற்றொரு முக்கியமான பாடமாகும். மனித இயல்புக்கு சவாலாக இருக்கும் அல்லது நமது புரிதலுக்கு அப்பாற்பட்ட ஒரு கட்டளையை ஆண்டவர் கொடுக்கும் போது, நாம் எப்படிப் பதிலளிப்போம்? நாம் பின்வாங்குவோமா - அல்லது ஆழமான புரிதலைத் தேட நமது ஆவிக்குரிய வாஞ்சை நம்மை முன்னோக்கிச் செலுத்த அனுமதிப்போமா ?குறுகிய வழி என்பது பெரும்பாலும் மாம்சத்திற்கு சவாலாகவே இருக்கும். உண்மையுள்ள விசுவாசிகள் கூட,

இயல்பான பகுத்தறிவு போதுமானதல்ல என்பதை உணர்ந்துகொள்ள வேண்டும். நமது சொந்த உள்ளுணர்வுகளைக் காட்டிலும் கிறிஸ்துவின் வழிநடத்துதலை விரும்புவதே உண்மையான விசுவாசமாகும்.

யோவான் 6 - ஆம் அதிகாரம் இந்தச் சோதனைக்கு ஒரு தெளிவான உதாரணத்தைத் தருகிறது. இயேசு தம்மை "வானத்திலிருந்திறங்கின அப்பம்" என்று அறிவித்தார், மேலும் அவரைப் பின்பற்றுபவர்கள் அவருடைய மாம்சத்தைப் புசித்து, அவருடைய இரத்தத்தைப் பானம் பண்ண வேண்டும் என்றும் போதித்தார். (யோவான் 6:41, 54) அவர் நேரடி அப்பத்தைப் பற்றிப் பேசாமல், அவர் ஒருவரே செலுத்தவிருக்கும் மீட்பு விலையான - அவருடைய பலியின் மீதான விசுவாசத்தைப் பற்றியே பேசினார்.

தற்காலிகமான வற்றிலிருந்து ஆவிக்குரிய நோக்கத்திற்கும், அற்புதங்களைப் பார்த்து வியப்பதிலிருந்து அவர் யார் என்ற உண்மையை (மேசியா)கண்டுகொள்வதற்கும் இயேசு தனக்கு செவிக்கொடுப்போரின் மனதை உயர்த்த முயன்றார். இருப்பினும், "என்னை அனுப்பின பிதா ஒருவனை இழுத்துக் கொள்ளாவிட்டால் அவன் என்னிடத்தில் வரமாட்டான்" (யோவான் 6:44)என்று அவர்களுக்கு நினைவூட்டினார். இத்தகைய சத்தியத்திற்கு ஒருவருடைய இருதயத்தை கடவுளால் மட்டுமே திறக்க முடியும்.

இயேசுவின் போதனையில் இது ஒரு மிகப்பெரிய திருப்புமுனையாக அமைந்தது. அவர் ஜனங்களின் சரீர ரீதியான தேவைகளைச் சந்திப்பதிலிருந்து (5,000 பேருக்கு உணவளித்தல்), ஆழமான ஆவிக்குரிய சத்தியங்களை நோக்கி நகர்ந்தார். இந்த ஆவிக்குரிய உண்மைகள் அங்கிருந்த ஒவ்வொருவருடைய விசுவாசத்தின் உறுதியையும் சோதித்தது.

இயேசுவின் வல்லமையைக் கண்டிருந்தவரும், அவருடைய நோக்கத்தைச் சற்று உணர்ந்திருந்தவருமான பேதுரு, இப்போது "இயேசு ஒருவரால் மட்டுமே நித்திய ஜீவனுக்குரிய வார்த்தைகளைப் பேச முடியும்"என்ற ஒரு முக்கியமான உண்மையை வெளிப்படுத்தினார். அன்று அநேகர் கிறிஸ்துவின் வார்த்தைகளை ஏற்றுக்கொள்ள முடியாமல் அவரை விட்டு விலகிச் சென்றபோது, "நீங்களும் போய்விட மனதாயிருக்கிறீர்களோ ? "என்று இயேசு சீஷர்களிடம் கேட்டார். அதற்கு பேதுரு - "ஆண்டவரே, நாங்கள் யாரிடத்தில் போவோம் ? நித்திய ஜீவ வசனங்கள் உம்மிடத்திலே உண்டு " (யோவான் 6:68) என்று பதிலளித்தார். பேதுருவுக்கு எல்லாமே புரிந்திருக்கவில்லை, ஆனால் பேசியவரை அவர் முழுமையாக நம்பினார்.

நாமும் இதே போன்ற ஒரு சோதனையை எதிர்கொள்கிறோம். கிறிஸ்துவின் அழைப்பு நமது இயல்பான விருப்பங்களோடு முரண்படும் போது, நாம் வேறு யாரிடம் திரும்புவோம் ? நல்ல மேய்ப்பன் நமக்கு முன்பாகச் செல்கிறார் என்பதை பேதுரு நமக்குக் கற்பிக்கிறார் - எனவே, நாம் ஒவ்வொரு அடியையும் புரிந்துகொள்வதால் அவரைப் பின்பற்றுவதில்லை, மாறாக அவருடைய குரலை அடையாளம் கண்டு கொள்ளக் கற்றுக்கொண்டதாலும், எல்லாவற்றிற்கும் மேலாக அவர் மீது வாஞ்சை கொண்டிருப்பதாலுமே அவரைப் பின்பற்றுகிறோம்.

## பேதுருவின் விசுவாசத்தினால் நாம் பெறும் பாடம்

கிறிஸ்துவை அடையாளம் காணவும் அவர்மேல் வாஞ்சை கொள்ளவும் நாம் கற்றுக்கொண்ட பிறகு, நமது வளர்ச்சி அங்கேயே முடிந்துவிடுவதில்லை - அது இன்னும் ஆழமாகத் தொடர்கிறது. மத்தேயு14:24- 33ல் சீஷர்களின் படகு புயலால் அலைக்கழிக்கப்பட்டது, இயேசு தண்ணீரின் மேல் நடந்து அவர்களிடம் வந்தபோது, பேதுரு இதை அனுபவித்தார். அவர்கள் பீதியடைந்து சத்தமிட்டனர்,



ஆனால் இயேசு அவர்களைத் தேற்றி - "திடன் கொள்ளுங்கள், நான்தான், பயப்படாதிருங்கள்" என்றார். பேதுரு மறுமொழியாக, "ஆண்டவரே, அது நீர்தானென்றால், நான் தண்ணீரின் மேல் நடந்து உம்மிடத்தில் வரக் கட்டளையிடும்" என்றார். "வா" என்ற இயேசுவின் எளிய அழைப்பின் பேரில், பேதுரு படகிலிருந்து இறங்கி, அவரை நோக்கித் தண்ணீரின் மேல் நடந்து சென்றார். ஆனால் காற்றின் வேகத்தைக் கண்ட பேருது, அவர் அச்சமடைந்து மூழ்கத் தொடங்கினார். அந்தத் தருணத்திலும், "ஆண்டவரே, என்னை இரட்சியும்" என்று அவர் கூக்குரலிட்டபோது அவருடைய உள்ளுணர்வு சரியாக இருந்தது உடனடியாக, இயேசு தன் கையை நீட்டி, அவரைப் பிடித்து, பாதுகாப்பாகப் படகிற்குள் கொண்டுவந்தார்.

இயேசுவின் வல்லமையானது, அவரை நோக்கிக் கூப்பிடுபவர்களுக்கு உதவி செய்ய அவர் கொண்டிருக்கும் மனப்பூர்வமான விருப்பத்திற்கு இணையானது என்பதை பேதுரு நமக்குக் கற்பித்தார். நமது சொந்த ஆவிக்குரிய விழிப்புணர்விலும் இதே பாடத்தையே நாம் கற்றுக்கொள்கிறோம். நாம் "அக்கிரமங்களினாலும் பாவங்களினாலும் மரித்தவர்கள்..." (எபேசியர் 2:1) தேவகோபத்திற்குப் பாத்திரமான பாவிகளாய் இருந்தோம், ஆனாலும், இயேசு நம்மை சகோதரர்கள் என்று அழைக்க வெட்கப்படவில்லை என்று எபிரெயர் 2:11 நமக்குச் சொல்கிறது.

நாம் முன்பு எப்படி இருந்தோம் என்பதற்கும், இப்போது எப்படி இருக்கிறோம் என்பதற்கும் இடையில் உள்ள வேறுபாட்டை நாம் ஒரு போதும் குறைத்து மதிப்பிடக்கூடாது. நமது கடந்த காலம் எவ்வளவு "மரியாதைக்குரியதாக" இருந்தாலும், கிறிஸ்து இல்லாமல் நாம் தொலைந்து போனவர்களாகவும், உதவியற்றவர்களாகவும் இருந்தோம் என்று வேதாகமம் தெளிவுபடுத்துகிறது. நமது அர்ப்பணிப்பு - அதாவது விடுதலைக்காக நாம் கூக்குரலிட்ட அந்தத் தருணம் - "ஆண்டவரே, என்னைக் காப்பாற்றும்" என்ற பேதுருவின் வேண்டுகோளின் எதிரொலியே ஆகும். நமது பலவீனத்தை நாம் எவ்வளவு முழுமையாக ஒப்புக்கொள்கிறோமோ, அவ்வளவு தெளிவாக அவருடன் நாம் நடக்கும் ஒவ்வொரு அடியிலும் அவருடைய பலம் வெளிப்படும்.

புரிந்துகொள்ள வேண்டும் என்ற பேதுருவின்
**தனித்துவமான வாஞ்சை**

இயேசுவைப் புரிந்துகொள்ள வேண்டும் என்ற பேதுருவின் வாஞ்சை அவருடைய ஆவிக்குரிய விழிப்புணர்வை நோக்கிய பயணத்தில் ஒரு முக்கிய அங்கமாக இருந்தது.இயேசுவின் வார்த்தைகளைக் கேட்பதோடு மட்டும் அவர் திருப்தியடையவில்லை - அவற்றைப் புரிந்து கொள்ள வேண்டும் என்று அவர் ஏங்கினார்.இது மத்தேயு15:15 ல் மிகத் தெளிவாகத் தெரிகிறது. அதாவது வாய்க்குள் செல்வது ஒருவனைத் தீட்டுப்படுத்தாது, வாயிலிருந்து வெளிவருவதே ஒருவனைத் தீட்டுப்படுத்தும் என்ற இயேசுவின் போதனையை விளக்குமாறு பேதுருவைக் கேட்கத் தூண்டியது அவருடைய அந்த வாஞ்சையே ஆகும்.

ஒரு எளிய கேள்வியைக் கேட்பதன் மூலம், பேதுரு புரிந்துகொள்ளுதலுக்கான கதவைத் தனக்குள் திறந்தார். இயேசு அதற்குப் பதிலாக - "வாய்க்குள் போகிறதெல்லாம் வயிற்றில் விழுந்து ஆசனவழியாய்க் கழிந்து போகும் என்பதை நீங்கள் இன்னும் அறியவில்லையா ?என்றார். வாயிலிருந்து

புறப்படுகிறவைகள் இருதயத்திலிருந்து புறப்பட்டுவரும் அவைகளே மனுஷனைத் தீட்டுப்படுத்தும். (வசனங்கள் 17,18) என்று கூறினார்.புரிந்துகொள்ள வேண்டும் என்ற பேதுருவின் வாஞ்சை, இயேசுவுக்குத் தமது வார்த்தைகளை விளக்க ஒரு வாய்ப்பை அளித்தது, இது பேதுருவை கிறிஸ்துவிடம் இன்னும் நெருக்கமாய் கொண்டு சேர்த்தது.

இதேபோன்ற புரிந்துகொள்ள வேண்டும் என்ற வாஞ்சை ஒவ்வொரு விசுவாசிக்கும் அவசியமானது. சங்கீதக்காரன், "உமது வேதத்திலுள்ள அதிசயங்களை நான் பார்க்கும்படி என் கண்களைத் திறந்தருளும்" (சங்கீதம் 119:18) என்று வேண்டினார். மாம்சமான மனுஷன் தேவனுடைய ஆவிக்குரிய காரியங்களைப் புரிந்துகொள்ள முடியாது என்று பவுல் விளக்கினார் (1கொரிந்தியர் 2:14- 15) மேலும், தீர்க்கதரிசியாகிய எரேமியா, கடவுள் நமக்குத் தரும் வாக்குறுதியைப் பகிர்ந்து கொண்டார் - "என்னை நோக்கிக் கூப்பிடு, அப்பொழுது நான் உனக்கு மறு உத்தரவு கொடுத்து, நீ அறியாததும் உனக்கு எட்டாததுமான பெரிய காரியங்களை உனக்கு அறிவிப்பேன். "(எரேமியா33:3)பரிசுத்தமான காரியங்களைப் புரிந்துகொள்ள வேண்டும் என்ற வாஞ்சை நம்மைப் பரிசுத்தப்படுத்துகிறது. இது நம்மை கடவுளிடம் நெருக்கமாய் இழுத்து, நமக்குள்ளே வளர்ந்து வரும் புதிய சிருஷ்டிக்கு ஆகாரமளிக்கிறது.

வெறும் ஆர்வம் மட்டுமே நம்மைப் பரிசுத்தமாக்கிவிடாது என்பதால், விவேகம் (பகுத்தறிவு) மிகவும் அவசியமானது. பரிசேயர்கள் இயேசுவைச் சிக்க வைப்பதற்காகவே அவரிடம் கேள்விகளைக் கேட்டது போல காணப்பட்டதை, மாம்சமானது பெரும்பாலும் சுயநலம் என்ற போர்வையில் பேராசையையும் பெருமையையும் வெளிக்காட்டுகிறது. (மத்தேயு22:15-17)புரிந்து கொள்ள வேண்டும் என்ற உண்மையான ஆவிக்குரிய வாஞ்சை நம்மை கிறிஸ்துவை நோக்கி இழுத்து, தாழ்மையையும் கீழ்ப்படிதலையும் ஊக்குவிக்கிறது. அதற்கு எதிராக, மாம்சமான ஆர்வம் தற்பெருமைக்கும், சர்ச்சைகளுக்கும், பாவத்திற்கும் வழிவகுக்கும்."தேவனை அறிய வேண்டும் என்ற எனது ஆசை வெறும் ஆர்வம்தானா, அல்லது அவரிடம் நெருங்கிச் சேர வேண்டும் என்ற உண்மையான வாஞ்சையா ? என்று நாம் நம்மையே கேட்டுக்கொள்ள வேண்டும்.

உண்மையான ஆவிக்குரிய புரிதலானது கிறிஸ்துவினால் விழிப்படைந்த ஒரு இருதயத்திலிருந்து உருவாகிறது. தேவனுடைய சத்தியத்தை ஆராய்வதும், அவருடைய நோக்கங்களைப் புரிந்துகொள்வதும், அவருடைய போதனைகள் நம் இருதயத்தை வடிவமைக்க அனுமதிப்பதும் தான் ஒருவருக்குக் கிடைக்கக்கூடிய மிகப் பெரிய மனநிறைவு என்பதை பேதுரு கண்டுகொண்டார். தீட்டுப்படுதல் எவ்வாறு இருதயத்தின் உள்ளிருந்து புறப்படுகிறதோ, அதேபோல தேவன் மீதான ஆழமான வாஞ்சையும் உள்ளிருந்தே புறப்படுகிறது. இந்த அணுகுமுறை வெறும் அறிவை மட்டும் தருவதில்லை, மாறாக ஒரு மாற்றத்தையும், இரட்சகருடனான ஆழமான ஐக்கியத்தையும் ஏற்படுத்துகிறது.

## பேதுருவின் வெளிப்பாடு - அவரது நம்பிக்கை உண்மையாகிறது

பேதுருவின் கேள்விகள், துணிச்சல், தோல்விகள் மற்றும் அவர் கண்ட திருப்பு முனைகள் என அனைத்தும் அவரை ஒரு தெளிவான ஆவிக்குரிய நிலைக்கு அழைத்துச் சென்றன. அவரது வளர்ச்சி மிகவும் குறிப்பிடத்தக்கது - கடவுள் அவரை ஒரு மீனவனின் வலையிலிருந்து சீஷத்துவத்திற்கு படிப்படியாக வழிநடத்தினார் என்பதற்காக மட்டுமல்ல, மாறாக அவரது ஆவிக்குரிய விழிப்புணர்வு இறுதியாக எதை வெளிப்படுத்தியது என்பதற்காகவுமே அது முக்கியத்துவம் பெறுகிறது.

இயேசுவோடு நடந்து சென்றபோது, அதாவது தனது மாமியார் குணமடைந்ததிலிருந்து, இயேசுவின் வஸ்திரத்தின் ஓரத்தைத் தொட்ட பெண் வரை தெய்வீக வல்லமையையும் அன்பையும் பேதுரு நேரடியாகக் கண்டார். மேலும் எதிர்ப்புகளுக்கு மத்தியிலும் பிதாவிடம் கிறிஸ்து கொண்டிருந்த பக்தியைக் கவனிப்பதிலிருந்து, விசுவாசத்தினால் புயல் வீசிய கடலில் இறங்கி நடந்தது வரை. பேதுருவின் இந்த அனுபவங்கள் அவரது விவேகத்தைக் கூர்மைப்படுத்தின, கிறிஸ்துவுக்கான அவரது வாஞ்சையை ஆழமாக்கின, மேலும் அவரை வளர்த்தன. இயேசு உண்மையில் யார் என்பதையும், அவர் தேவனுடைய குமாரன் என்பதையும் அவர் அடையாளம் கண்டுகொள்ளக் கற்றுக்கொண்டார்.

இயேசு, "ஆனால் நான் யார் என்று நீங்கள் சொல்லுகிறீர்கள் ? "என்று கேட்டபோது, பேதுரு தயாராக இருந்தார். அவர் தெளிவோடும் உறுதியோடும், "நீர் ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து" என்று அறிக்கை செய்தார். இந்த ஒப்புதல் மனித அறிவாலோ அல்லது நுண்ணறிவாலோ உண்டானதல்ல. இயேசு அவரை நோக்கி - "யோனாவின் குமாரனாகிய சீமோனே, நீ பாக்கியவான், மாம்சமும் இரத்தமும் இதை உனக்கு வெளிப்படுத்தவில்லை, பரலோகத்திலிருக்கிற என் பிதாவே இதை உனக்கு வெளிப்படுத்தினார்," என்று கூறினார்(மத்தேயு16:15-17)

பேதுருவின் இந்த அங்கீகாரம் தெய்வீக கிருபையினால் உண்டானது. நாமும் அதே கிருபை மற்றும் வழிகாட்டுதலைப் பெற்றிருக்கிறோம். பேதுருவைப் போலவே, நாமும் இருளிலிருந்து ஒளிக்கு வரவழைக்கப்பட்டோம் - இது நமது தகுதியினாலோ அல்லது புத்திசாலித்தனத்தினாலோ அல்ல, மாறாக கடவுளின் அன்பான கரத்தினால் நடந்தது. நமது புரிதல் என்பது ஒரு பரிசு - ஆழமான புரிதல், விசுவாசம் மற்றும் கீழ்ப்படிதலுக்காக இருதயங்களைத் தயார்படுத்துவதில் நம் பிதாவின் பொறுமையான கிரியைக்கு இது ஒரு சாட்சியாகும்.

## பேதுரு ஒரு மகிமையான தரிசனத்தைக் காண்கிறார்

இயேசுவை மேசியா என்று பேதுரு ஒப்புக்கொண்ட பிறகு, அவருடைய ஆவிக்குரிய பார்வைத்திறன் கூர்மையடைந்தது. தூக்கத்திலிருந்து விழித்தவுடன் கண்கள் வெளிச்சத்திற்கு ஏற்ப, மாறுவதைப் போல, பேதுரு புதிய தெளிவோடும் மிகமையோடும் இயேசுவைக் காணத் தொடங்கினார். முழுமையான புரிதல் பெந்தெகொஸ்தே நாளுக்குப் பிறகுதான் வரும் என்றாலும், அவருடைய இந்த அறிக்கை அடுத்து வரப்போகும் காரியங்களுக்கு அவரைத் தயார்படுத்தியது.

விரைவிலேயே இயேசு பேதுரு, யாக்கோபு மற்றும் யோவானை ஒரு மலையின் மேல் அழைத்துச் சென்றார் (மத்தேயு17:1-13)அங்கே அவர்கள் இயற்கையான பிரமிப்பையும் மிஞ்சிய ஒரு காட்சியைக் கண்டார்கள். இயேசு மறுரூபமானார் - அவருடைய முகம் சூரியனைப் போலப் பிரகாசித்தது, அவருடைய ஆடைகள் வெண்மையாக ஜொலித்தது. மோசே மற்றும் எலியா அவருக்கு அருகில் தோன்றினார்கள். அப்பொழுது "இவர் என்னுடைய நேச குமாரன் இவரில் பிரியமாயிருக்கிறேன், இவருக்குச் செவி கொடுங்கள்" என்று வானத்திலிருந்து ஒரு சத்தம் உண்டாயிற்று. இதைக் கேட்டு அஞ்சிய சீஷர்கள் முகங்குப்புற விழுந்தார்கள், இயேசு வந்து அவர்களை எழுப்பும் வரை அவர்கள் அப்படியே இருந்தார்கள். தாம் உயிர்த்தெழுந்த பிறகே இந்தத் தரிசனத்தைப் பற்றிப் பேச வேண்டும் என்று அவர் அவர்களுக்குக் கட்டளையிட்டார்.

இயேசுவை தேவனுடைய குமாரன் என்று உறுதிப்படுத்திய பேதுரு, இப்போது கிறிஸ்துவின்

எதிர்கால மகிமையையும், வரப்போகும் தேவனுடைய இராஜ்யத்தையும் ஒரு கணப்பொழுது கண்டார். இந்தத் தரிசனம் பேதுருவுக்கு மிகவும் ஆழமானதாக இருந்தது. மேலும் இது அவருடைய விசுவாசத்தை பலப்படுத்தியது. இங்கே மோசேயும் எலியாவும் வரவிருக்கும் மாம்சம் மற்றும் ஆவிக்குரிய வாக்குறுதிகளைப் பெறப்போகும் விசுவாசமுள்ளவர்களின் பிரதிநிதிகளாகத் தோன்றினர். இருப்பினும், இயேசு அவர்களை விடப் பிரகாசத்தில் மேலோங்கி நின்றார். பேதுரு அறிக்கை செய்த அதே மகிமையுள்ள கிறிஸ்து அவரே .மறுரூப மலைச் சம்பவம் பேதுருவின் ஆவிக்குரிய விழிப்பில் ஒரு மைல்கல்லாக அமைந்தது.இது அவருடைய முந்தைய அறிக்கையை (மத்தேயு 16)உறுதிப்படுத்தியதுடன், கிறிஸ்துவின் வருங்கால மகிமையை முன்னறிவிப்பதாகவும் இருந்தது. மேலும், இது பேதுரு என்னும் மனிதனின் உருவாக்கத்தில் ஒரு முக்கியப் பகுதியாக மாறியது, இது பின்னர் அவர் சீரமைக்கப்பட்ட நிகழ்வினால் (யோவான் 21)முழுமையடைந்தது.

இன்று நமக்கும், கிறிஸ்துவை நமது இரட்சகராகப் பரிசுத்த ஆவி நம் கண்களுக்குப் புலப்படுத்தும் போதே நமது ஆவிக்குரிய விழிப்புத் தொடங்குகிறது. இது ஆவிக்குரியதாக இருந்தாலும், அவருடைய மகத்துவத்தைப் பற்றிய இந்தத் தரிசனம், வாழ்க்கையின் கவனச்சிதறல்களுக்கு மத்தியிலும் நம்மைத் தாங்கிப் பிடிக்கும்.மலையிலிருந்து இறங்கி வந்த பேதுருவைப் போலவே, நாமும் இந்த வெளிப்பாட்டைப் பாதுகாத்து, உலகத்தின் இரைச்சல் களைத் தவிர்த்து, ஆழமான மற்றும் நிலையான ஆவிக்குரிய தாகத்தை வளர்த்துக்கொள்ள வேண்டும். அப்போதுதான் கிறிஸ்துவின் பிரமிப்பும் மகிமையும் நம் இருதயங்களில் பிரகாசமாகவும், நம்மை நிலைநிறுத்துவதாகவும் இருக்கும்.

## முடிவுரை - பேதுருவின் விழிப்புணர்வின் முக்கியத்துவமும் தாக்கமும்

இயேசுவை கிறிஸ்து என்றும், ஜீவனுள்ள தேவனுடைய குமாரன் என்றும் அங்கீகரிப்பது ஒரு விசுவாசி பெறக்கூடிய மிகப்பெரிய வெளிப்பாடாகும் - இது மாம்சமான உறக்கத்திலிருந்து ஆவிக்குரிய வாழ்விற்கு வரும் ஒரு விழிப்புணர்வு. கடவுள் நம் கண்களைத் திறந்து, ஆத்துமாவை விழிப்படையச் செய்து அவரால் மட்டுமே திருப்திப்படுத்தக்கூடிய ஒரு வாஞ்சையை நமக்குள் உருவாக்குகிறார்.

இந்த வெளிப்பாடு நம்மிடம் ஒரு உக்கிராணத்துவத்தை எதிர்பாக்கிறது. கவனச்சிதறல்களைக் களைந்து, தேவ ஆவியின் மீதான விருப்பத்தை வளர்த்து, தைரியத்தைத் தழுவி, நமது ஆவிக்குரியப் பயணத்தில் தெளிவையும், இந்த குழப்பமான உலகில் ஆவிக்குரிய ஸ்திரத்தன்மையையும் கண்டடைய வேண்டும். பேதுருவின் அறிக்கை அவரது ஆவிக்குரிய வாழ்வின் முடிவல்ல, அது ஒரு தொடக்கமாகும். அப்போது அவருக்கு முழுமையான புரிதல் இல்லையென்றாலும், அவர் கற்பனை செய்ய முடியாத அளவிற்கு ஒரு உண்மையான தேவ ஊழியராக உருவாக்கப் படவிருந்தார்.

நமக்கும் அப்படியே - ஆவிக்குரிய விழிப்புணர்வு என்பது படிப்படியாக நம்மை உருமாற்றி, நமது மனதைப் புதிதாக்குவதற்கு வழிநடத்துகிறது. பேதுருவின் விழிப்புணர்வு மற்றும் தேடலின் முன்மாதிரியால் நாமும் தூண்டப்படுவோமாக.

வைராக்கியம் நல்லது

# பேதுருவின் அசைக்கமுடியாத வைராக்கியம்



— Keith Belhumeur

"அவர் திரும்பித் தம்முடைய சீஷரைப் பார்த்து, பேதுருவை நோக்கி - எனக்குப் பின்னாகப்போ, சாத்தானே, நீ தேவனுக்கு ஏற்றவைகளைச் சிந்தியாமல் மனுஷருக்கு ஏற்றவைகளைச் சிந்திக்கிறாய் என்று சொல்லி, அவனைக் கடிந்து கொண்டார். " (மாற்கு8:33)

பெரும் வல்லமை படைத்தவர்களாக இருந்தபோதிலும், தங்கள் மனித கண்ணோட்டத்தை தெய்வீக அறிவுறுத்தலுடன் சீரமைக்கப் போராடி பல விசுவாச வீரர்களின் உதாரணங்களை வேதாகமம் நமக்கு வழங்குகிறது.வேதாகமத்தில் நாம் காணும் மிகச் சிறந்த ஊழியக்காரர்கள் கூட, கடவுளின் திட்டத்திற்காகக் காத்திருப்பதை விட, தங்கள் சொந்த அறிவையும் தர்க்கத்தையும் நம்பிச் செயல்பட்ட தருணங்கள் உண்டு.

இந்தப் போராட்டத்திற்கு, சீமோன் பேதுரு ஒரு நல்ல உதாரணமாகத் திகழ்கிறார். அவர் மிகுந்த விசுவாசமும், கிரியையும் கொண்ட மனிதராக இருந்தபோதிலும், அவருடைய வைராக்கியம் எப்போதும் அறிவால் கட்டுப்படுத்தப்படவில்லை. ஆண்டவரின் பணி நிறைவே வேண்டும் என்ற அவரது வைராக்கியம், தெய்வீக ஞானத்தையும் நோக்கத்தையும் கருத்தில் கொள்ளாமல், மனித



பகுத்தறிவு, மற்றும் முயற்சியின் மூலம் வலுக்கட்டாயமாக முன்னெடுத்துச் செல்ல அவர் முயன்றார்.

பேதுருவின் வாழ்க்கைப்பயணம் ஒரு வெறும் வரலாற்றுப் பதிவு மட்டுமல்ல, அது ஒரு விசுவாசி எவ்வாறு முதிர்ச்சியடைய வேண்டும் என்பதற்கான ஒரு வரைபடமாகும். உணர்ச்சிவசப்படும் ஒரு மனிதன் எவ்வாறு ஆவிக்குரிய முதிர்ச்சியை அடைகிறான் என்பதை அவரது வாழ்வின் மூன்று நிலைகளில் நாம் காணலாம். சீமோன் பேதுருவின் பயணத்தைப் பார்க்கும்போது, அவர் மனத்தளர்ச்சி அடைந்தவரோ அல்லது ஆவிக்குரிய விஷயத்தில் அறிவற்றவரோ அல்ல. தானியேல் தீர்க்கதரிசி முன்னறிவித்த மேசியாவின் வருகைக்காக அவரும் அவருடைய சகோதரர் அந்திரேயாவும் மிகுந்த ஆவலுடன் காத்திருந்ததாக தெரிகிறது. யோவான் ஸ்நானகரின் சாட்சியத்தின் மூலமாக அவர்கள் ஏற்கனவே இயேசுவை அறிந்திருக்க வாய்ப்புண்டு. இருப்பினும் பேதுருவின் படகில் அமர்ந்து இயேசு போதித்த அந்தத் தருணம் அவருடைய வாழ்வின் மிக முக்கியமான திருப்பமாக அமைந்தது. ஒரு சாதாரண மீன்பிடிப் படகு, ஒரு பிரசங்க பீடமாகவும், பிறகு ஒரு மாபெரும் அற்புதத்தின் களமாகவும் மாறியதை நாம் காண்கிறோம்.

ஆண்டவரே, என்னைவிட்டு அகன்று போகும், நான் ஒரு பாவி" என்ற சீமோனின் பதில், அவர் தனது தகுதியின்மையை நன்கு உணர்ந் திருந்ததைக் காட்டியது. ஆனால் இயேசு அவரது உறுதியான குணத்தை உணர்ந்து கொண்டு,



"இனிமேல் நீ மனிதர்களைப் பிடிப்பாய்" (லூக்கா5:1-11 ) என்றார். அந்த அற்புதம் அவர்களின் நம்பிக்கையை உறுதிப்படுத்தியதுடன், சீமோனுக்கும் அந்திரேயாவுக்கும் ஒரு புதிய விழிப்புணர்வைத் தூண்டியது. அவர்கள் எல்லாவற்றையும் விட்டுவிட்டு அவரைப் பின்தொடர்ந்தார்கள்.

**மாம்சத்தின் மீதான நம்பிக்கை**

சீமோனின் பெயரை பேதுரு - "ஒரு பாறை" அல்லது "கல்" என்று இயேசு மாற்றியபோது, அவருடைய நிலைத்தன்மையையும் உறுதியையும் பகிரங்கமாக அவர் அங்கீகரித்தார். (மத்தேயு16:13-20)பின்னர், செசரியா பிலிப்பியில், பேதுரு தனது புதிய பெயருக்கு ஏற்றவாறு, இயேசுவை "மேசியா, ஜீவனுள்ள தேவனுடைய குமாரன்" என்று தைரியமாகப் பிரகடனப்படுத்தினார். இந்த நெகிழ்ச்சியான தருணத்தில், இந்த சத்தியத்தின் மீது தாம் தமது திருச்சபையைக் கட்டுவார் என்று பேதுருவிடம் தெரிவித்ததன் மூலம் இயேசு அவருக்குத் தைரியமூட்டினார். 2மேலும் பாதாளத்தின் 3வாசல்கள் அதை மேற்கொள்ளாது என்று இயேசு அறிவித்தார். இயேசு, "யோனாவின் மகனான சீமோனே, நீ பாக்கியவான், ஏனெனில் இது மாம்சத்தினாலும் இரத்தத்தினாலும் உனக்கு வெளிப்படுத்தப்படவில்லை, பரலோகத்திலிருக்கிற என் பிதாவினாலேயே உனக்கு வெளிப்படுத்தப்பட்டது " என்று அறிவித்தார். இந்தச் செயல், அப்போஸ்தலர்களிடையே பேதுருவுக்கு ஓர் தலைமைப் பாத்திரத்தை வழங்கியது.

எவ்வளவு ஊக்கமளிக்கும் மற்றும் மகத்தான தருணம். ஆயினும், இந்த உரையாடல்கள் பேதுருவுக்குள் ஒரு இயல்பான நம்பிக்கையைத் தூண்டி, தனது சொந்த முடிவைச் சார்ந்திருக்க அவரைத் தைரியப்படுத்தியதாகத் தெரிகிறது. ஒரு இயல்பான மனிதனின் வரம்புகளால் கட்டுண்டிருந்த பேதுருவின் அடக்கப்படாத ஆர்வம், அவரது முன்னோக்கிய மனப்பான்மையில் வெளிப்படத் தொடங்கியது.

தொடர்ச்சியான நிகழ்வுகள் அரங்கேறத் தொடங்கின. முதன் முறையாக, தாம் பாடுபட்டு மரிக்க வேண்டும் என்ற கடினமான கருத்தை இயேசு பகிர்ந்து கொண்டார். ஆழ்ந்த அன்பினால் உந்தப்பட்டும், ஆவிக்குரியப் புரிதல் இல்லாமலும் இருந்த பேதுரு, இயேசுவைத் தனியே அழைத்துச் சென்று, தன் குருவைக் கடிந்து கொண்டு, "ஆண்டவரே, ஒருபோதும் இல்லை, இது உமக்கு ஒருபோதும் நடக்காது என்றார் (மத்தேயு16:22)

பேதுருவின் கண்டனத்திற்கு, தவறான திசையில் செலுத்தப்பட்ட மிகுந்த தைரியம் தேவைப்பட்டது. பேதுரு பாதுகாப்பளிப்பவராக இருந்தார், ஆனால் அவர் இயேசுவின் பணியின் நோக்கத்தையே தடுத்துக்கொண்டிருந்தார். இயேசு,



மனத்தாழ்மையை ஏற்படுத்தும் ஒரு கண்டனத்துடன் சரியாகப் பதிலளித்தார் - "எனக்குப் பின்னால் போ சாத்தானே,நீ எனக்கு இடறலாக இருக்கிறாய், நீ தேவனுடைய காரியங்களை அல்ல, மனித காரியங்களையே சிந்திக்கிறாய்(மத்தேயு16:23)

தம்முடைய சீஷர்கள் தங்களைத் தாங்களே மறுதலிக்க வேண்டும் என்று இயேசு தொடர்ந்து விளக்கினார் (மத்தேயு16:24) அவர்களுடைய சூழ்நிலையின் ஆவிக்குரிய யதார்த்தத்துடன், பேதுருவின் இயல்பான மனித பகுத்தறிவு முரண்பட்டிருந்தது என்பதற்கு இது அவருக்கு ஒரு குறிப்பாக இருந்திருக்க வேண்டும். யெகோவா தேவனின் சித்தத்தை நாம் பகுத்தறியாதபோது, மனித பகுத்தறிவை ஆவிக்குரிய காரியங்களுடன் கலக்கும்படி நாம் அதிக பாரம் ஏற்றப்பட்டு சோதிக்கப்படுவது ஒன்றும் கடினமானதல்ல.

பேதுருவுக்கும் அப்போஸ்தலர்களுக்கும் இருந்த பகுத்தறிவின்மை, மேசியா உடனடியாக ஒரு நித்திய இராஜ்யத்தை ஸ்தாபிப்பார் என்ற அவர்களுடைய எதிர்பார்ப்பிலிருந்து நிச்சயமாக உருவானது. யூத ஜனங்களுக்கும், உலகத்திற்கும், குறிப்பாக கிறிஸ்துவின் சரீரத்திற்கும் யெகோவா தேவன் வைத்திருந்த தொலைநோக்குத் திட்டத்தின் தன்மையை அவர்கள் உணரவில்லை. பேதுருவின் ஆவிக்குரிய பகுத்தறிவின்மையும் முதிர்ச்சியின்மையும் மாறும், மேலும் அவருடைய வளர்ச்சியிலிருந்து நமது சொந்தப் பாதைக்கான முன்மாதிரிகளை நாம் அறிந்துகொள்ளலாம்.

## வெறும் மனித அக்கறைகள்

தேவனுடைய திட்டத்தின் முழுமையையும் மனிதகுலம் அனைத்திற்குமான எதிர்கால மீட்பையும் பேதுருவும் புரிந்துகொள்ளவில்லை என்பதை அவருடைய பல அனுபவங்கள் வெளிப்படுத்துகின்றன, (லூக்கா19:44, அப்போஸ்தலர் 3:21)அவர் இன்னும் பரிசுத்த ஆவியைப் பெற்றிருக்கவில்லை, மேலும் வரவிருக்கும் ஒரு இராஜ்யத்தைப் பற்றிய தனது எதிர்பார்ப்பால் கட்டமைக்கப்பட்ட ஒரு உலகக் கண்ணோட்டத்தில் இயேசுவுடனான தனது பயணத்தைப் பார்த்தார். பேதுருவின் மாம்ச ரீதியான குறைகள் இருந்தபோதிலும், சுவிசேஷத்தின்

வளர்ச்சிக்கு வளமான நிலமாக அமையக்கூடிய மற்ற நல்ல குணங்கள் அவருக்குள் இருந்தன.

பேதுரு தனியாகஇருக்கவில்லை, அவருடன் இருந்த பலரும் அவ்வாறே சிந்தித்தார்கள், அதுஅவசியமாக ஆவிக்குரிய பலவீனமாக இருக்கவில்லை, இயேசுவின் முதல் வருகையின் நோக்கத்தையும் அதன் செயல்பாட்டையும், மனுக்குலம் அனைத்திற்குமான யெகோவா தேவனின் திட்டத்தின் பரந்த தன்மையையும் அவர்கள் புரிந்துகொள்ளவில்லை அவ்வளவுதான். மகிமையின் எதிர்பார்ப்பால் பேதுரு குருடாக்கப்பட்டதால், மீட்புப் பலியின் அவசியத்தை - அதாவது இயேசுவின் மரணத்தை - பேதுருவாலும் மற்றவர்களாலும் பகுத்தறிய முடியவில்லை. கிரீடத்திற்கு முன் சிலுவையை சுமக்க வேண்டும் என்பதையும், இராஜ்யம் உடனடியாக வெற்றி கொள்வதன் மூலம் அல்ல, மாறாக யெகோவா தேவனின் உரிய காலத்தில் ஸ்தாபிக்கப்பட வேண்டும் என்பதையும் அவர்களால் அப்போது காண முடியவில்லை.

பேதுருவின் புரிதலில் உள்ள பின்வரும் இடைவெளிகளைக் கவனியுங்கள்.

மறுரூபக் காட்சியின்போது, பேதுரு மூன்று கூடாரங்களைப் போடும் படிபரிந்துரைத்தார்.

ஒருவேளை இது, கவனத்திற்குப் பதிலாகச் செயலில் ஈடுபடும் பொதுவான மனித இயல்பிலிருந்து தோன்றியிருக்கலாம் - அதாவது, தேவன் பரலோகத்திலிருந்து, "இவர் என் நேச குமாரன்" இவருக்குச் செவிகொடுங்கள்" என்று சொன்ன வார்த்தைகளின் படி, (மாற்கு 9:2-7) தேவகுமாரனின் வார்த்தைகளைப் பயபக்தியுடன் கேட்பதற்குப் பதிலாகச் செயலில் ஈடுபட்டிருக்கலாம்.

இந்தத் தவறான புரிதல் போக்கு, மேல் வீட்டு அறையிலும் தொடர்ந்தது. இயேசு ஒவ்வொரு அப்போஸ்தலரின் பாதங்களையும் கழுவி, அவர்களுக்கு போதித்த நேரத்தில் பேதுரு தனது குழப்பத்தை வெளிப்படுத்தினார். "நீர் ஒருக்காலும் என் கால்களைக் கழுவப்படாது "என்று பேதுருமறுத்தார். (யோவான் 13:5-9)அநேகமாகப் பக்தியினால் தூண்டப்பட்டிருந்தாலும், பேதுருவின் மறுப்பு, அடிமைத்தனம் குறித்த இயேசுவின் நோக்கமான பாடத்தை அவர் இன்னும் புரிந்துகொள்ளவில்லை என்பதைக் காட்டியது. "நான் செய்கிறது இன்னதென்று இப்பொழுது நீ அறியாய், இனிமேல் அறிவாய் என்று" இயேசு விளக்கினார், "பேதுரு பின்னர் முழுமையாகப் புரிந்துகொள்வார் என்பதை அறிந்த இயேசு, அவர் கழுவப்படாவிட்டால், பேதுரு தம்முடன் பங்கு பெற முடியாது என்றும் பதிலளித்தார். (யோவான்13 :8)

தன் எதிர்காலத்தைத் தானே முன்னறிவிக்கிறோம் என்பதை உணராமல், இயேசு தன் கால்களையும் கைகளையும், தலையையும் கழுவ வேண்டும் என்று பேதுரு கேட்டதில் அவருடைய கீழ்ப்படிதல் வெளிப்படுகிறது. பேதுரு உண்மையில் இயேசுவின் வார்த்தைகளால் கழுவப்பட்டு, பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானத்தின் மூலம் பெந்தெகொஸ்தே நாளில் எல்லாவற்றையும் நினைவுகூருவார் என்பதை இயேசு அறிந்திருந்தார்.

நான் எத்தனை முறை மன்னிக்க வேண்டும் என்று பேதுரு கேட்டபோது, அவருடைய உலக சிந்தனையைக் கவனிக்கவேண்டும். அதற்கு இயேசு ஒரு உவமையின் மூலம் பதிலளித்தார். அது, அவருடைய முழுப் பணியின் நோக்கமும் பாவ மன்னிப்பைப் (கடனை) பற்றியது என்பதையும், மன்னிப்பைப் பெற்றவர்கள் மற்றவர்களை எவ்வாறு மன்னிக்க வேண்டும்

என்பதையும் நுட்பமாக வெளிப்படுத்துகிறது. "ஆண்டவரே, எனக்கு விரோதமாகப் பாவம் செய்யும் என் சகோதரனையோ சகோதரியையோ நான் எத்தனை முறை மன்னிக்க வேண்டும் ? ஏழு முறை வரை மன்னிக்கலாமா ? " என்று பேதுரு கேட்டதற்கு இயேசு, "நான் உங்களுக்குச் சொல்கிறேன், ஏழு முறை அல்ல, எழுபத்தேழு முறை" என்று பதிலளித்தார் (மத்தேயு18:21-22)பேதுருவின் உலகப் பார்வையுடனான போராட்டம் தொடர்ந்தது. மற்றொரு சந்தர்ப்பத்தில், ஒரு செல்வந்தன் இராஜ்யத்தில் பிரவேசிப்பது கடினம் என்பதை அறிந்த பேதுரு ஆச்சரியப்பட்டார்.

அவருடைய முடிவுகள் சுயநலமானவையாகவும், வெறும் மனித இயல்புடையவையாகவும் இருந்தன. பேதுரு, "நாங்கள் உம்மைப் பின்பற்றுவதற்காக எல்லாவற்றையும் விட்டுவிட்டோம்" என்று பதிலளித்தார். (மத்தேயு19:27)மேலும் அவர் அப்படியானால் எங்களுக்கு என்ன கிடைக்கும்? என்றும் கேட்டார்.

பின்னர், இயேசு பேதுருவுக்கு எதிர்கால மகிமை, உரிமைச் சொத்து மற்றும் நித்திய ஜீவன் பற்றிய சில ஆறுதலான வாக்குறுதிகளை அளித்தார். (மத்தேயு19:27-30)ஆனால்,



இயேசுவுடனான தனது அனுபவங்களிலிருந்து, பேதுரு தனது சேவையானது தனிப்பட்ட மகிமையின் எதிர்பார்ப்பால் மட்டுமே தூண்டப்படக்கூடாது என்பதைக் கற்றுக்கொண்டார்.

மகிமைக்கான நமது எதிர்பார்ப்பும் நமது பிரதான உந்துதலாக இருக்கக்கூடாது. "தனிப்பட்ட மகிமைக்கான பேராசையைப் பொறுத்தவரை, நாம் முதன்மையானவராக இருக்க வேண்டும் என்ற எந்த ஆசையையும் ஒதுக்கி வைக்க வேண்டும் என்று போதகர் ரசல் அறிவுறுத்தினார். மேலும் இந்தச் சேவை அன்பினால் தூண்டப்பட வேண்டும். நமக்குத் தெரிந்த மிகச் சிறந்த வழியில் கர்த்தருடைய காரியத்தை முன்னெடுத்துச் செல்ல நம்மால் முடிந்த அனைத்தையும் செய்ய வேண்டும். அன்பினால் தூண்டப்படாத எந்தச் சேவையும் கர்த்தரின் பார்வையில் ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல.

### வாழ்க்கைக்குரிய ஒரு பாடம்

பேதுருவின் அனுபவம் ஒவ்வொரு விசுவாசிக்கும் ஒரு எச்சரிக்கையான பாடமாகும். அவர் குறையுள்ளவராகவோ அல்லது தகுதியற்றவராகவோ இருக்கவில்லை, அவர் நம்மைப் போலவே ஒரு சாதாரண மனிதராக இருந்தார். அவருடைய எதிர்வினைகள் பெரும்பாலும் மாம்சரீதியானவையாக இருந்தபோதிலும், மேசியாவின் பணியில் பங்கெடுக்க வேண்டும் என்ற அவருடைய ஒரே நோக்குடைய ஆசையை நிச்சயமாக யெகோவா தேவனும் இயேசுவும் நேசித்தார்கள்.

மாம்ச சிந்தனையுடன் பேதுரு கொண்டிருந்த அவசரப் போராட்டம் அவரை சாத்தானின் இலக்காக மாற்றியது (1பேதுரு 5:8)சாத்தான் நமது குணலட்சணக் குறைபாடுகளை பலவீனங்களாகக் கருதி, நம்மைச் சீரழிக்க முயல்கிறான் என்பதை அவருடைய

அனுபவங்கள் நமக்குக் கற்பிக்கின்றன. நம்மிடம் பகுத்தறிவு இல்லாததே நமது எதிராளிக்குக் கிடைக்கும் வாய்ப்பாகும்.

இயயேசு பேதுருவிடம் இதை விளக்கி, "சீமோனே, சீமோனே,கோதுமையைச் சுளகினால் புடைக்கிறதுபோலச் சாத்தான் உங்களைப் புடைக்கிறதற்கு உத்தரவு கேட்டுக்கொண்டான்." என்றார். (லூக்கா 22:31) ஆனாலும் சீமோனே, உன் விசுவாசம் தளர்ந்து போகாதபடிக்கு நான் உனக்காக ஜெபித்திருக்கிறேன். நீ மனந்திரும்பிய பின்பு, உன் சகோதரர்களைப் பலப்படுத்து" என்றார் (லூக்கா 22:32)

மனிதனின் பெருமையை நசுக்குவதற்கு அந்தச் சோதனை அவசியமாக இருந்ததால், பேதுரு அதிலிருந்து தப்பிக்க வேண்டும் என்று இயேசு ஜெபிக்கவில்லை. மாறாக, பேதுருவின் விசுவாசம் நிலைத்திருந்து, அது மற்றவர்களைப் பலப்படுத்தப் பயன்படுத்தப்பட வேண்டும் என்று அவர் ஜெபித்தார்.

ஆனாலும்,அக்காலத்தில், பேதுரு தனது சொந்த ஆவிக்குரிய பலவீனத்தை உணராமல் இருந்தார். சலித்துப் பார்க்கப்பட வேண்டிய அதே தற்பெருமையால் குருடாக்கப்பட்ட அவர், "நான் போகும் இடத்திற்கு இப்பொழுது உன்னால் பின்தொடர முடியாது, ஆனால் பிற்காலத்தில் நீ பின்தொடர்வாய்" என்ற இயேசுவின் கூற்றைப் புரிந்து கொள்ளவில்லை. பேதுரு ஒரு நியாயமான கேள்வியைத் தொடர்ந்தார், ஆனால் தனது அடக்கப்படாத, மனப்பூர்வமான வைராக்கியத்தை எடுத்துக்காட்டும் ஒரு துணிச்சலான கூற்றுடன் அதை முடித்தார். "ஆண்டவரே, நான் இப்பொழுது உமக்குப் பின்னே ஏன் வரக்கூடாது ? உமக்காக என் ஜீவனையும் கொடுப்பேன்." என்றார். இயேசு அவரை சிந்திக்க வக்கும்படியாக,"எனக்காக உன் ஜீவனைக் கொடுப்பாயோ ? சேவல் கூவுகிறதற்கு முன்னே நீ என்னை மூன்றுதரம் மறுதலிப்பாயென்று, மெய்யாகவே மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன்" என்றார். (யோவான் 13:37-38)

இந்த உரையாடல், நமது சொந்த பதிலைச் சிந்தித்துப் பார்க்க நம்மைத் தூண்ட வேண்டும். நாம் உண்மையிலேயே இயேசுவுக்காக நம் உயிரைக் கொடுப்போமா ? பேதுருவைப் போல, கடுமையான உலக அழுத்தத்தின் கீழ் இருக்கும் போது நம்மால் இயேசுவை நிராகரிக்க முடியுமா ? பேதுருவைப் போலவே நாமும் அதே அறிவுசார்ந்த பெருமையைக் கொண்டிருக்கக்கூடுமா?

ஆம், நிச்சயமாக நம்மால் முடியும். நாமும் அதே வீழ்ச்சியடைந்த மாம்சத்தைச் சேர்ந்தவர்கள், மேலும் இந்த ஆபத்துகள் உண்மையானவை. ஒரு வாழ்க்கைப் பாடத்தைக் கற்றுக்கொள்வதற்கு முன்பு, பேதுரு தனது அடக்கப்படாத வைராக்கியத்திற்கு ஒரு கடைசி உதாரணத்தை நமக்குக் காட்டுகிறார். இயேசு காட்டிக்கொடுக்கப்பட்ட இரவில் கெத்செமனே தோட்டத்தில், பேதுரு தைரியமாகத் தன் வாளை உருவி, பிரதான ஆசாரியனின் வேலைக்காரனுடைய காதை வெட்டினார். அவர் இயேசுவுக்காகப் போராடத் தயாராக இருந்தார், ஆனால் அவருடன் முழுமையாகப் பாடுபட அவர் இன்னும் தயாராக இல்லை. அந்த மனிதனைக் காப்பதற்காக அவருடைய வாள் உருவப்பட்டது. ஆனால் அறியாமலேயே யெகோவா தேவனின் தெய்வீகத் திட்டத்திற்கு எதிராக இருந்தது.

பேதுருஇயேசுவை பாதுகாக்க வேண்டும் என்ற நோக்கத்தைப் புரிந்துகொண்ட அதே வேளையில், அவர் தனது சொந்த பணியையும் புரிந்துகொண்டார். வன்முறையைப் பயன்படுத்தத் தயாராக இருந்த பேதுருவை இயேசு கடிந்து

கொண்டார், ஆனால் பின்னர், யெகோவா தேவனின் சித்தத்தைச் செய்வதிலிருந்து தன்னைத் தடுக்காதபடிக்கு, அவருடைய கடமை உணர்வினால் அன்புடன் கேட்டு கொண்டார். (யோவான் 18:10) இயேசு அவரிடம், "உன் வாளை உறையிலே போடு , பிதா எனக்குக் கொடுத்த பாத்திரத்தில் நான் பானம் பண்ணாமல் இருப்பேனோ?"என்று கேட்டார். (யோவான் 18:11)

பேதுருவின் விசுவாசப் பயணம் நமக்கு ஒரு சக்திவாய்ந்த உதாரணமாகும். யெகோவா தேவன் நம்முடைய பலவீனங்களை புரிந்துகொண்டு, நமது வளர்ச்சிக்கும் முன்னேற்றத்திற்கும் அவற்றை உபயோகப்படுத்துகிறார் என்பதே நாம் கற்றுக்கொள்ளும் பாடமாகும்.

பேதுருவைப் போலவே, யெகோவா தேவனின் திட்டங்களைப் பற்றிய நமது புரிதலை மனித கண்ணோட்டத்தால் மட்டுப்படுத்திக் கொள்வதில் ஒரு ஆபத்து இருக்கிறது. நாம் தாழ்மைக்குள் வளரக் கற்றுக்கொள்வோம். (நீதிமொழிகள் 16:18)பேதுருவின் சோதனைகளும் தோல்விகளும், அவருக்கும் நமக்கும் நன்மை பயக்கும் விதமாக, அவருடைய இயல்பான வைராக்கியத்தைத் தாழ்த்திய ஒரு பயணமாக இருந்தது. (ரோமர் 8:28)

"நான் என் ஜீவனையும் கொடுப்பேன்" என்ற தன்னம்பிக்கையிலிருந்து, "ஆண்டவரே, நான் உம்மை நேசிக்கிறேன் என்பது உமக்குத் தெரியும்" என்ற தாழ்மையான கீழ்ப்படிதலுக்கு பேதுரு மேற்கொண்ட பயணமே , நமது பயணமாகவும் இருக்கவேண்டும். "நமது சொந்த தர்க்கங்களைக் கொண்டு ஆண்டவருக்கு ஆலோசனை கூறும் போக்கை நாம் ஒதுக்கிவிட்டு, அதற்குப் பதிலாக, தேவனுடைய சித்தத்தை மட்டுமே நாடும் தாழ்மையான சேவையையும் அன்பையும் ஏற்றுக்கொள்வோம்.

அறிவில்லாத வைராக்கியத்தின் உச்சக்கட்டத்திற்கு எதிராக லவோதிக்கேயா சபைக்கு நம் ஆண்டவரின் அறிவுரை எச்சரிக்கிறது - அதாவது, நாம் ஆவிக்குரிய ரீதியில் வறியவர்களாக இருந்துகொண்டே, "ஐசுவரியவான்களாகவும் திரவியசம்பன்னனாகவும்" இருக்கிறோம் என்று எண்ணுவதாகும். (வெளிப்படுத்தல் 3:17-19)

பேதுருவின் போராட்டத்திலிருந்து நாம் பாடம் கற்றுக்கொள்வோம்

உண்மையான ஆவிக்குரிய முதிர்ச்சி என்பது நாம் எவ்வளவு அறிந்திருக்கிறோம் என்பதைப் பற்றியதல்ல, மாறாக நமது மனித பகுத்தறிவையும் சித்தத்தையும் கடவுளிடம் முழுமையாகக் கீழ்ப்படுத்த நமது அறிவை எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதைப் பற்றியது.

நமது சொந்த விசுவாசப் பயணம் முழுவதும் நாம் தாழ்மையுடன் இருப்போமாக, மேலும் எல்லாவற்றிலும் யெகோவாதேவனின் சர்வ வல்லமையுள்ள சித்தத்தைத் தேடுவோமாக (சங்கீதம் 2:11)

(1) ஸ்டராங்கின் சொல் G 4074, பெட்ரோஸ் - ஒரு (பாறைத் துண்டு) (3037 - விடப் பெரியது) ஒரு பெயராக, பெட்ரஸ், ஒரு அப்போஸ்தலன் - பேதுரு, பாறை

(2) ஸ்ட்ராங்கின் சொல் 1577, எக்லீசியா - வெளியேஅழைத்தல், சந்திப்பு, குறிப்பாக ஒரு மத கூடுகை - கூடுகை, திருச்சபை.

(3) ஸ்ட்ராங்கின் சொல் 86, பாதாளம் - இறந்த ஆத்துமாக்களின் இடம் அல்லது நிலை, கல்லறை, நரகம்.

(4) R5793,"புகழ் மீது ஆசை கொள்ளாதே."

### இயேசு பேதுருவை பார்த்தார்

# பேதுருவின் தனிப்பட்ட மனமடிவு



— André Couceiro

"அப்பொழுது பேதுரு - சேவல் கூவுகிறதற்குமுன்னே நீ என்னை மூன்றுதரம் மறுதலிப்பாய் என்று இயேசு தன்னிடத்தில் சொன்ன வசனத்தை நினைத்துக்கொண்டு, வெளியே போய், மனங்கசந்து அழுதான்." (மத்தேயு26:75)

சுவிசேஷத்தில் காணப்படும் பல விசுவாசத்தின் சித்திரங்களில், இயேசு கைது செய்யப்பட்ட இரவில் அப்போஸ்தலனாகிய பேதுருவின் சித்திரத்தைப் போலஇவ்வளவு தத்துரூபமான, மனிதாபிமானமுள்ள, மனதை உலுக்கும்படியான மிகச் சிலதேஉள்ளன. பேதுரு கிறிஸ்துவை மறுதலித்தது என்பது வெறும் ஒரு வரலாற்று நிகழ்வோ அல்லது ஒரு தார்மீக எச்சரிக்கையோ அல்ல, அது மனித ஆத்துமாவுக்குக் காட்டப்படும் ஒரு கண்ணாடியாகும்.

பேதுருவிடம், தைரியமும் அச்சமும், பக்தியும் தன்னிறைவும், ஆவிக்குரிய ஆசைகளும் மனித பலவீனமும் மோதுவதைக் காண்கிறோம். பெரும் நம்பிக்கையும் பெரும் அச்சமும் ஒரே இருதயத்தில் ஒருங்கே நிலவ முடியும் என்ற வேதனையான உண்மையை ஆழ்ந்து சிந்திக்க நம்மை அழைக்கிறது.

இந்தக் கட்டுரை, பேதுருவின் தனிப்பட்ட விரக்திக்குள் வீழ்ந்த பயணத்தில் - அவருடைய எச்சரிக்கைகள், அவரது நம்பிக்கை, அவரது சரிவு - அதை பின்தொடர்ந்து, இறுதியில் அவருடைய கசப்பான அழுகையை, நிலைத்த நம்பிக்கையாக மாற்றும் மீட்பைச் சுட்டிக்காட்டுகிறது. பேதுருவின் அனுபவம், மனித பலத்தின் வரம்புகளையும், தாம் நேசிப்பவர்களுக்கு ஆண்டவர் வழங்கும் மென்மையான, பொறுமையான போதனையையும் விளக்குகிறது.

## வைராக்கியத்தின் கீழ் உள்ளபலவீனம்

பேதுரு பெரும்பாலும் தனது துணிச்சலுக்காக நினைவுக்கூறப்படுகிறார். அவர் படகிலிருந்து இறங்கி வந்த சீஷர், இயேசுவைக் கிறிஸ்துவாக அறிக்கையிட்டவர், அசைக்க முடியாத விசுவாசத்தை வாக்குறுதியளித்தவர். ஆயினும்,வேதாகமம் பேதுருவின் குணத்தை உயர்வாக எண்ணவில்லை. மாறாக, அது அவரை வலுவான உந்துதல்களும் ஆழ்ந்த நேர்மையும் கொண்ட ஒரு மனிதராக முன்வைக்கிறது - தன்னம்பிக்கை போதவில்லை என்று வெளிப்படும் போது, நொறுக்கும் ஏமாற்றத்திற்கு மிகவும் எளிதில் ஆளாகக்கூடிய ஒரு நபராகவே அவரைச் சித்தரிக்கிறது.

பேதுரு இயேசுவை மறுதலித்தது மனித பலவீனத்திற்கு ஒரு தெளிவான எடுத்துக்காட்டாகும். பயமும் தற்காப்புணர்வும் அவருடைய விசுவாசத்தை வென்று, ஆழ்ந்த தோல்வியின் ஒரு தருணத்திற்கு வழிவகுத்தது. அவருடைய அனுபவங்கள், ஒரு தனி நபருக்குள் இருக்கும் அகப் போராட்டத்தையும், பெரும் விசுவாசம் மற்றும் பெரும் பலவீனம் ஆகிய இரண்டிற்குமான திறனையும் எடுத்துக் காட்டுகின்றன.

வேத மாணவர்கள் நீண்ட காலமாக கவனித்தபடி, தேவன் தம்முடைய ஊழியர்களை அவமானப்படுத்துவதற்காக இத்தகைய தோல்விகளை அனுமதிப்பதில்லை, மாறாக, சுயநம்பிக்கையின் வரம்புகளையும் தெய்வீக கிருபையின் அவசியத்தையும் அவர்களுக்குக் கற்பிப்பதற்காகவே அனுமதிக்கிறார். மேலும், தேவனுடைய மகிமையால் ஆயிரமாண்டு, ஆலயத்தை நிரப்பும் "விலைமதிப்பற்ற கற்களாக" அவர்கள் ஒன்றிணைக்கப்படுவதற்கு முன்பு, விசுவாசிகளின் குணாதிசயங்கள் வடிவமைக்கப்பட்டு மெருகேற்றப்பட வேண்டிய அவசியமான சுத்திகரிப்பையும் அவை வழங்குகின்றன.

பேதுரு இயேசுவை உண்மையாக நேசித்தார் - ஆனால் அவர் தன்னை இன்னும் முழுமையாகப் புரிந்துகொள்ளவில்லை.

## மனச்சோர்வூட்டும் ஒரு கணிப்பு



ஸ்தோத்திரப் பாடலைப் பாடியப் பின் மேல் அறையை விட்டு வெளியேறிய பிறகு, இயேசு பேசிய வார்த்தைகள் பேதுருவுக்குக் குழப்பமாகவும், மனக்கசப்பை ஏற்படுத்துவதாகவும் இருந்திருக்க வேண்டும். "இன்றிரவு நீங்கள் எல்லாரும் என்னிமித்தம் இடறலடைவீர்கள்" (மத்தேயு26:31)

பேதுரு உடனடியாக எதிர்வினையாற்றுகிறார். மத்தேயு26:30-35 மற்றும் மாற்கு 14:29-31ன் படி, மற்ற அனைவரும் இயேசுவைக் கைவிட்டாலும், தான் ஒருபோதும் அவ்வாறு செய்யமாட்டேன் என்று அவர் வலியுறுத்துகிறார். அவருடைய இந்த அறிவிப்பு, சாதாரணமாகக் காட்டப்படும் வீரம் அல்ல, அது மனப்பூர்வமான உறுதியான நம்பிக்கை, வீரமிக்க விசுவாசத்தைக் கடைப்பிடிக்கத் தன்னால் முடியும் என்று பேதுரு உண்மையாகவே நம்பினார்.

இருப்பினும், இயேசு துல்லியமானதும் மிகவும் கலக்கமூட்டக்கூடியதுமான ஒரு முன்னறிவிப்புடன் பதிலளித்தார். "மெய்யாகவே நான் உனக்குச் சொல்லுகிறேன், இன்றிரவு சேவல் கூவுவதற்கு முன்பாக, நீ என்னை மூன்று முறை மறுதலிப்பாய்" (மத்தேயு26:34)

இந்தத் தீர்க்கதரிசனம் பேதுருவின் சுயபிம்பத்தைத் தாக்குகிறது. அது அவருடைய விசுவாசத்தை மட்டுமல்ல, தன் இருதயத்தைப் பற்றிய அவருடைய புரிதலுக்கும் சவாலிடுகிறது.

மனித கண்ணோட்டத்தில், பேதுருவின் பதில் புரிந்துகொள்ளக்கூடியதே. அவர் கிறிஸ்துவைப் பின்பற்றுவதற்காக எல்லாவற்றையும் விட்டுவிட்டார். அவர் அற்புதங்களைக் கண்டிருக்கிறார், தெய்வீகப் போதனைகளைக் கேட்டிருக்கிறார், இராஜ்யத்தின் வல்லமையை உணர்ந்திருக்கிறார்.

அவரால் எப்படித் தன் ஆண்டவரை மறுதலிக்க முடிந்தது? ஆயினும், சகோதரர் ரசல் அடிக்கடி வலியுறுத்தியது போல, ஆண்டவர் நமது நோக்கங்களை மட்டுமல்ல, நமது பலவீனங்களையும் காணக்கூடியவராக இருக்கிறார். பேதுருவின் நம்பிக்கை உணர்ச்சியையும் தனிப்பட்ட உறுதியையும் அதிகமாகச் சார்ந்திருந்தது என்பதை அவர் புரிந்துகொண்டார். பயத்தால் அசைக்கப்படும்போது அந்த அடித்தளங்கள் எவ்வளவு பலவீனமானவை என்பதை வரவிருக்கும் நேரங்கள் வெளிப்படுத்தியது.

## முதல் பாடம் - விழிப்புணர்வும் பலவீனமும்

பேதுருவின் மனத்தாழ்மையூட்டும் பயணத்தின் அடுத்த கட்டம் கெத்சேமனே தோட்டத்தில் அரங்கேறுகிறது. மிகுந்த துக்கத்தால் மூழ்கிய இயேசு, தம்முடன் விழித்திருந்து ஜெபிக்குமாறு தம்முடைய நெருங்கிய சீஷர்களைக் கேட்டுக்கொண்டார். மூன்று முறை அவர் திரும்பி வந்தபோது, அவர்கள் உறங்கிக்கொண்டிருப்பதைக் கண்டார். (மத்தேயு26:40-45)

சில கணங்களுக்கு முன்பு முழுமையான விசுவாசத்தை வெளிப்படுத்திய பேதுருவால், ஒரு மணி நேரம் கூட விழித்திருக்க முடியவில்லை. "ஆவி உற்காசமுள்ளதுதான், மாம்சமோ பலவீனமுள்ளது" (மத்தேயு26:41) என்று இயேசுவின் மென்மையான கண்டனம் உணர்த்துவதாக இருந்தது.

இந்தக் கூற்று பேதுருவின் தர்மசங்கடத்தை உள்ளடக்கியுள்ளது. அவருடைய

எண்ணங்கள் ஆவி உண்மையாகவே விருப்பமுள்ளதாக இருந்தது. அவருடைய இருதயம் நேர்மையானதாக இருந்தது. ஆனால் அவருடைய மாம்சம் - அதாவது மனித வரம்புகள், பயங்கள் மற்றும் உள்ளுணர்வுகள் - பலவீனமாக இருந்தது. உண்மையான ஆவிக்குரிய விருப்பத்தை மாம்சத்தின் மீதான அதிக நம்பிக்கையிலிருந்து பிரித்தறியவே தேவன் இதுபோன்ற அனுபவங்களை அனுமதிக்கிறார் என்று வேத மாணவர்கள் அடிக்கடி குறிப்பிட்டிருக்கிறார்கள்.

நெருக்கடியான சூழ்நிலைகளில் விசுவாசத்தைத் தக்கவைத்துக் கொள்ள, நல்ல நோக்கங்கள் மட்டுமே போதாது என்பதை பேதுரு வேதனையுடனும் மெதுவாகவும் கற்று வருகிறார். விழிப்புணர்வு, ஜெபம் மற்றும் தாழ்மை ஆகியவை தேவைப்படுகின்றன - ஆனால் இந்தப் பாடங்கள் இன்னும் அவருக்குள் முழுமையாகப் பதியவில்லை.

## புரிதல் இல்லாத வைராக்கியம்

கைது செய்ய வந்த குழு வந்தபோது, பேதுரு உள்ளுணர்வின்படி உடனடியாக செயல்பட்டார். யோவான் 18:10-11 படி, அவர் ஒரு வாளை உருவி, பிரதான ஆசாரியனின் வேலைக்காரனுடையக் காதை வெட்டினார். மத்தேயுவின் பதிவும் இந்தச் செயலை அதே குழப்பமான தருணங்களுக்குள் வைக்கிறது.



முதல் பார்வையில், விசுவாசம் மீண்டும் பெறப்பட்டுவிட்டது போல் தோன்றியது. பேதுரு போரிடத் தயாராக இருந்தான். ஆனாலும் இயேசு உடனடியாக அவரைக் கடிந்து கொண்டார், "பட்டயத்தை உறையில் போடு, பிதா எனக்குக் கொடுத்த பாத்திரத்தில் நான் பானம் பண்ணாமல் இருப்பேனோ? (யோவான் 18:11 )

பேதுருவின் தைரியம் உண்மையானதுதான் - ஆனால் அது தவறான வழியில் செலுத்தப்பட்டது.ஒரு நேரடி மோதலில் தன் உயிரைப் பணயம் வைக்க அவன் தயாராக இருந்தார், ஆனாலும் அவருக்கு முன்னால் காத்திருந்த, அமைதியானதும் மிகவும் நயவஞ்சகமானதுமான சோதனைக்கு அவர் தயாராக இல்லை -அதாவது, சக மனிதருடன் தொடர்பு ஏற்பபட்டு, கேலிக்கு உள்ளாக்கப்பட்டு, கைது செய்யப்பட்டுவிடுவோமோ என்ற பயம் அவருக்குள் வந்தது.

இந்தத் தருணம், வேதாகமத்தில் மீண்டும் மீண்டும் வரும் ஒரு கருத்தை அடிக்கோடிட்டுக் காட்டுகிறது: புரிதல் இல்லாத வைராக்கியம், விசுவாசம் இல்லாத பயத்தைப் போல ஆபத்தானது. பேதுருவின் பலம் தவறான திசையில் பயன்படுத்தப்பட்டுக் கொண்டிருந்தது. வெளிப்படக்கூடிய தேவனுடைய நோக்கத்திற்குக் கீழ்ப்படிவதற்குப் பதிலாக, அவர் இன்னும் மனித வழிகளின் மூலம் இயேசுவையும் தன்னையும் பாதுகாக்க முயன்றுகொண்டிருந்தார்.

## மெதுவான வீழ்ச்சி

இயேசு கைது செய்யப்பட்ட பிறகு, பேதுரு சற்று தொலைவில் அவரைப் பின்தொடர்ந்தார்.

நான்கு சுவிசேஷங்களிலும் பதிவு செய்யப்பட்டுள்ள இந்த விவரம், உளவியல் ரீதியாகப் பலவற்றை வெளிப்படுத்துகிறது. பேதுரு முற்றிலுமாகத் தப்பி ஓடவில்லை, அதே சமயம் அவர் கிறிஸ்துவுடன் வெளிப்படையாக நிற்கவும் இல்லை. பயம் அவருடைய உறுதியை அரிக்கத் தொடங்கியது.

முற்றத்தில் நடந்த காட்சி, கிட்டத்தட்ட

இரக்கமின்றி, படிப்படியாக அரங்கேறியது. மத்தேயு26:69-74, மாற்கு14:66-71 , லூக்கா 22:54-61, மற்றும் யோவான் 18:25-27ஆகிய வசனங்களில், பேதுரு மூன்று முறை கேள்விக்குள்ளாக்கப்பட்டார். முதலில் ஒரு வேலைக்காரப் பெண் அவரை அடையாளம் கண்டுகொண்டாள். பேதுரு, தனக்கு இயேசுவைத் தெரியாது என்று மறுதலித்தார். பின்னர் மற்றொரு குற்றச்சாட்டு, அதைத் தொடர்ந்து மற்றொரு மறுப்பு.

இறுதியாக, அங்கிருந்தவர்கள் அவரது உச்சரிப்பைக் கவனித்து, அவன் இயேசுவின் சீஷர் என்று வற்புறுத்திக் கூறினார்கள்.இம்முறை, பேதுரு விசாரணைக்குட்படுத்தப்பட்ட அந்த மனிதனுக்கும் தனக்கும் எந்தத் தொடர்பும் இல்லை என்று வலியுறுத்தி, சபித்துத் திட்டினான். ஒவ்வொரு மறுப்பும் தீவிரமடைந்தது. தவிர்ப்பாகத் தொடங்கிய அந்தச் செயல், அப்பட்டமான நிராகரிப்பில் முடிந்தது. பேதுரு தன்னை மட்டும் பாதுகாத்துக் கொள்ளவில்லை, அவர் தனது அடையாளத்தைக் கிறிஸ்துவிடமிருந்து விலக்கிக் கொண்டிருந்தார்.இங்கே, ஆண்டவரின் தீர்க்கதரிசனம் உண்மையாகி - துல்லியமாக, வேதனையுடன் பகிரங்கமாக வெளிப்பட்டது.

### அவரை நொறுக்கிய அந்த பார்வை



முழு விவரிப்பிலும் மிகவும் மனதை உலுக்கும் விவரங்களில் ஒன்றை லூக்கா மட்டுமே பதிவு செய்கிறார் - "கர்த்தர் திரும்பி, பேதுருவைப் பார்த்தார்" (லூக்கா 22:61)

அந்தப் பார்வையில் என்ன இருந்தது என்று நமக்குச் சொல்லப்படவில்லை - பரிதாபமா? இரக்கமா? ஒருவேளை வேறு ஏதேனும் உணர்ச்சியாகவோ, அல்லது இரண்டின் கவலையாகவும் இருக்கலாம். ஆனால் இயேசுவின் கண்களில் பேதுரு என்ன கண்டாரோ, அது அவரை நொறுக்கிவிட்டது.

அந்தக் கணத்தில், சேவல் கூவியது. திடீரென்று, நினைவு, தீர்க்கதரிசனம், மனசாட்சி மற்றும் யதார்த்தம் ஆகியவை ஒன்றிணைந்தது, இயேசு பேசிய வார்த்தைகள் பேதுருவுக்கு நினைவுக்கு வந்தது. அவர் தன்னைத் தெளிவாகப் பார்த்தார் - தான் கற்பனை செய்திருந்த கதாநாயகனாக அல்ல, மாறாகத் தன் ஆண்டவரை மறுதலித்த ஒரு பயந்த மனிதனாக. அந்தத் தருணத்தில் தான் பேதுரு அதலபாதாளத்தில் வீழ்ந்தார்.

### மனமுடைந்து அழுகையும் தனிப்பட்ட விரக்தியும்

மாற்கு14:72 , மத்தேயு26:75, மற்றும் லூக்கா22:62 ஆகிய அனைத்தும் ஒரே மாதிரியான பிரதிபலிப்பை விவரிக்கின்றன, பேதுரு மனங்கசந்து மனமுடைந்து அழுதார்.

இவை அமைதியான கண்ணீர் அல்ல. இந்த மொழி, வன்மையாக விம்முவதையும், தாங்க முடியாத துக்கத்தையும், ஆழ்ந்த மன வேதனையையும் உணர்த்துகிறது. இது ஒரு தவறுக்கான வருத்தம் மட்டுமல்ல, இது தன்னம்பிக்கையின் சரிவு, அடையாளத்தின் சிதைவு. பேதுருவைப் பொறுத்தவரை, விரக்தி முழுமையானது. இயேசு முன்னறிவித்தபடியே, அவர் பகிரங்கமாக மீண்டும் மீண்டும் துல்லியமாகத் தவறிவிட்டார். மரணம் வரை உண்மையுள்ளவராக இருப்பேன் என்று வாக்குறுதியளித்த அந்த மனிதர், தன் பாதுகாப்பைக்



காத்துக் கொள்வதற்காகத் தன் ஆண்டவரை மறுதலித்திருந்தார்.

இந்தத் தருணம் மிக முக்கியமானது. தேவன் சில சமயங்களில் தம்முடைய ஊழியர்கள் தங்களைத் தாங்களே முற்றிலுமாக இழந்து, இறுதியில் அவரைச் சார்ந்திருக்க இப்படிப்பட்டவைகளை அனுமதிக்கிறார். பேதுருவின் கண்ணீர், அவரது சுயத்தின் அழிவைக் குறித்தது. விரக்தியின் பள்ளத்தாக்கில் நாம் மேற்கொள்ளும் பயணம், யதார்த்தத்தின் பாரத்தால் நமது சுயபிம்பம் இறுதியாகச் சரிந்து விழும் சந்திப்பில் நிகழும் பேதுருவின் கசப்பான அழுகையை அடிக்கடி பிரதிபலிக்கிறது.

நாம் போதைப்பழக்கத்தின் சுழற்சிச் சங்கிலிகளில் சிக்கிக்கொண்டாலும் சரி, அல்லது தனிப்பட்ட பாவங்களில் அமைதியான, அரிக்கும் சுமையால் வீழ்ந்தாலும் சரி, நாமும் கூட இறுதியில் நமது தன்னம்பிக்கை நொறுங்கிப்போகும் ஒரு நிலையை அடையக்கூடும். நாம் வலிமையாக இருக்க வேண்டும், சிறந்தவர்களாக இருக்க வேண்டும், அல்லது மீண்டும் ஒருபோதும் வீழ்ந்துவிடக்கூடாது என்று நமக்கும் கடவுளுக்கும் பெரிய வாக்குறுதிகளை அளிக்கிறோம் - ஆனால் இறுதியில், பேதுருவைப் போல், நாம் செய்யவே மாட்டோம் என்று சத்தியம் செய்த அதே காரியத்தைச் செய்வதைக் காண்கிறோம்.

இந்த அடையாளச் சரிவு வேதனை அளிக்கிறது. ஏனெனில் நமது மன உறுதி மட்டுமே போதுமானதல்ல என்ற உண்மையை அது நம்மை எதிர்கொள்ளச் செய்கிறது. ஆனால், இந்தப் பள்ளத்தாக்கிலிருந்து மேலேறி வெளியேற ஒரு வழி இருக்கிறது.

**பள்ளத்தாக்கிலிருந்து மலைக்கு**

பேதுருவின் கதையின் அழகு, அவர் மறுதலித்ததில் இல்லை, மாறாக அதன் பின்விளைவில்தான் உள்ளது. மனமுடைந்து அழுத அதே மனிதர், பின்னர் ஆனந்தக் கண்ணீர் சிந்துவார். வேலையாட்களுக்கு முன்பாக இயேசுவை மறுதலித்தவர், ஆட்சியாளர்களுக்கு முன்பாக அவரைத் தைரியமாகப் பிரகடனப்படுத்துவார். விரக்தியின் பள்ளத்தாக்கு, ஆனந்த மலைக்கு வழிவிடும்.

பேதுருவின் தனிப்பட்ட தோல்விகளின் வழியான பயணம், மனத்தாழ்மை, இரக்கம் மற்றும் அசைக்க முடியாத விசுவாசம் ஆகியவை வளர்வதற்கான மண்ணாக அமைந்தது. பிற்காலத்தில் அவருடைய பலம் என்பது தன்னுடையதன்னம்பிக்கை அல்ல, மாறாகத் தன்னுடைய பலவீனத்தை அறிந்து கடவுளை

முழுமையாக நம்பிய ஒருவரின் அமைதியான தைரியமே ஆகும்.

சகோதரர் ரசல் அடிக்கடி வலியுறுத்தியது போல, கடவுள் தம் ஜனங்களுடன் நடந்துகொள்ளும் விதம் படிப்பினை அளிக்கிறது.

ஆகையால், நாம் சோதனைக்கு விரைந்து ஆளாகவோ, விவேகமற்ற நடத்தையால் நமக்கு நாமே உபத்திரவத்தை வரவழைத்துக் கொள்ளவோ கூடாது. ஆயினும் சாந்தம் மென்மை, பொறுமை மற்றும் அன்பு ஆகிய மனப்பான்மைகளுடன் கடைப்பிடிக்கப்படும் சத்தியம் மற்றும் நீதியின் கோட்பாடுகளுக்கு உண்மையாய் இருப்பதற்கான வெகுமதிகளாக இவை நமக்குக் கிடைக்கும்போது, நாம் அவற்றில் களிக்கூர்வோம், ஏனெனில் அவை நமக்கு எதிரான பல தீமைகளின் ஊழியங்கள் போன்றவை. தெய்வீக வழிகாட்டுதலின் கீழ், அவை நம்மை ஆண்டவரின் சாயலை மேலும் பிரதிபலிக்கவும், இப்பொழுதும் இனிமேலும் அவருடைய பிரதிநிதிகளாகவும் நீதியின் ஊழியர்களாகவும் இருக்கவும் தகுதியாக்கி ஆயத்தப்படுத்துகின்றன.

ஆண்டவருக்கும் அவருடைய சேவைக்கும் உண்மையாய் இருப்பதோடு வரும் சோதனைகள், கஷ்டங்கள் மற்றும் துன்புறுத்தல்களிலிருந்து பின்வாங்குவதும் அவற்றைத் தவிர்ப்பதும், நம்முடைய சுயத்திலிருந்து பின்வாங்குவதற்குச் சமமாகும். "அர்ப்பணிப்பு என்பது, அவருடன் பாடுபடுவது, அதன் மூலம் நாம் அவருடன் ஆளவும் முடியும் - அவருடன் மரிப்பது அதன் மூலம் நாம் அவருடன் வாழ்வும் முடியும்." (R2352)

எனவே, பேதுருவின் வீழ்ச்சி அவருடைய அழைப்பின் முடிவாக இருக்கவில்லை, மாறாக அது அவருடைய ஆயத்தத்தில் ஒரு அவசியமான அத்தியாயமாக இருந்தது. நொறுக்கப்பட்ட பெருமை, நிலைத்திருக்கும் கிருபைக்கு இடமளித்தது.

**நமக்கான ஒரு நம்பிக்கை**

பேதுருவின் கதை முழுவதும், தோல்வி என்பது முடிவானதல்ல என்பதை நமக்கு உறுதியளிக்கிறது. கசப்பான கண்ணீர் வீணாவதில்லை. மனந்திரும்புதல் உண்மையானதாக இருக்கும் போது, விரக்தியானது மாற்றத்திற்கான ஒரு வாசலாக மாறுகிறது.

முற்றத்தில் பேதுருவைப் பார்த்த அதே ஆண்டவர், பின்னர் கடலோரத்தில் அவரை கண்டனத்தினால் அல்ல அன்பினால் அவரை மீட்டெடுத்தார். ஒரு காலத்தில் கிறிஸ்துவை மறுதலித்த அந்த மனிதர், ஆதிகாலத் திருச்சபையின் தூண்களில் ஒருவரானார் - அவர் குற்றமற்றவர் என்பதால் அல்ல, மாறாக அவர் மன்னிக்கப்பட்டதாலேயே அப்படி ஆயிற்று.

இவ்வாறு பேதுருவின் பாதை நம்மை முன்னோக்கி வழிநடத்துகிறது. பயத்திலிருந்து விசுவாசத்திற்கும். தன்னம்பிக்கையிலிருந்து தேவன் மேல் நம்பிக்கைக்கும். இருண்ட முற்றத்திலிருந்து உயிர்த்தெழுதலின் காலையின் ஒளிக்கும்.

நாம் ஆழமான பள்ளத்தாக்குகளில் தடுமாறி விழும்போதுகூட, உயர்ந்த நிலத்தை நோக்கிய பாதையை கடவுள் ஏற்கனவே வடிவமைத்துக் கொண்டிருக்கிறார் என்பதை அவருடைய பயணம் நமக்கு நினைவூட்டுகிறது. மேலும், அந்தப் பள்ளத்தாக்கிற்கு அப்பால் ஒரு மலை உள்ளது - அது கிருபையில் நனைந்து, ஆனந்தத்தால் மகுடம் சூடி, தோல்வியல்ல, அன்பே இறுதியான தீர்ப்பை வழங்கும் என்ற அமைதியான உண்மையை எதிரொலிக்கிறது. ஆம், கடும் அழுகையின் இரவு நீண்டதாக இருக்கலாம் - ஆனால் கிறிஸ்துவை நம்புகிறவர்களுக்கு விடியல் வரும். "சாயங்காலத்தில் அழுகைத் தங்கும், காலையில் களிப்புண்டாகும்." (சங்கீதம் 30:5)

## பேதுருவின் மீட்பும், நமது நம்பிக்கையும்

# விசுவாசத்தின் வீரியம் திரும்பப் பெறப்பட்டது



— Ken Allison

"அவர்கள் போஜனம் பண்ணினபின்பு, இயேசு சீமோன் பேதுருவை நோக்கி - யோனாவின் குமாரனாகிய சீமோனே, இவர்களிலும் அதிகமாய் நீ என்னிடத்தில் அன்பாயிருக்கிறாயா என்றார். அதற்கு அவன்- ஆம் ஆண்டவரே, உம்மை நேசிக்கிறேன் என்பதை நீர் அறிவீர் என்றார். அவர் - என் ஆட்டுக்குட்டிகளை மேய்ப்பாயாக என்றார்." (யோவான் 21:15)

ஒரு மனிதனின் ஆத்துமாவையே மாற்றி எழுதும் அளவுக்கு மிக மென்மையானதும் , ஊடுருவும் ஒரு தருணத்தை கற்பனை செய்து பாருங்கள்.

ஒரு காலத்தில் துணிச்சலும் திமிரும் நிறைந்திருந்த பேதுருவைக் கவனியுங்கள், இப்போது மறுப்பினால் அவன் குரல் அடங்கிப் போயிருந்தது. கசப்பான கண்ணீரால் அவன் உள்ளம் நசுக்கப்பட்டிருந்தது. கடந்த சில வாரங்களின் நிகழ்வுகள், துயரமும் அற்புதமும் கலந்த ஒரு சூறாவளியைப் போல, அவனைத் திகைப்பிலும் பலவீனத்திலும் ஆழ்த்தியது. பின்னர், உயிர்த்தெழுந்து பிரகாசித்துக் கொண்டிருந்த இயேசுவைக் கண்டு, கலிலேயக் கடலோரத்தில் அவனைச் சந்திக்க அவர் பிரயத்தனப்பட்டுச் சென்றார்.

இந்த சந்திப்பில், கடவுளின் மகத்துவம் இடி முழக்கத்திலோ அல்லது பிரம்மாண்டத்திலோ அல்ல, மாறாக அமைதியான, தளராத அன்பில் வெளிப்படுகிறது. பேதுருவை மீட்ட அதே கடவுள், நமக்கு புதுப்பித்தலை வழங்குகிறார், அவருக்கு முன்பாக அமர்ந்து, அவருடைய மறுரூபமாக்கும் பராமரிப்பை நம்பும்படி நம்மை அழைக்கிறார். பேதுருவின் அனுபவம், ஒரு மீனவனின் விரக்திக்கும் ஒரு அப்போஸ்தலனின் வல்லமைக்கும் இடையிலான மீட்பின் பாதையை நமக்குக் காட்டுகிறது. அது தன் ஆண்டவரை மறுதலித்த ஒரு மனிதனை ஆரம்பகாலத் திருச்சபையின் தூணாக உருமாற்றுகிறது.

### பரிச்சயமான ஒரு கரை, நீடித்த சந்தேகம்

இயேசுவின் உயிர்த்தெழுதலுக்குப் பிறகு, பேதுரு தனக்குத் தெரிந்த மீன்பிடித்



தொழிலுக்குத் திரும்பினார். யோவான் 20:6-7, அவர் வெறுமையான கல்லறைக்கு ஓடினார் என்று சொன்னாலும் அவருடைய சந்தேகம் நீடித்தது. அவரைத் தனித்துக் குறிப்பிடுகிறது - "அவருடைய சீஷர்களுக்கும் பேதுருவுக்கும் சொல்லுங்கள்" - இது விரக்தியின் மத்தியில் ஒரு கிருபையின் குறிப்பாகும். ஆயினும், பிரதான ஆசாரியனின் முற்றத்தில் தான் அடைந்த தோல்வியின் உள்மனக் கணக்கு இன்னும் அவர் மீது பெரும் பாரமாக இருந்தது.

யோவான் 21 ஆம் அதிகாரத்தில், அவர் மற்ற ஆறு பேருடன் மீண்டும் கடலுக்குச் சென்றார். (யோவான் 21:3) அவர், நான் மீன்பிடிக்கப் போகிறேன்" என்று அறிவிக்கிறார். இது ஒரு பொழுதுபோக்கு பயணம் அல்ல, அது பழக்கமான இடத்திற்குத் திரும்பும் ஒரு பயணமாக இருந்தது.

நம்முடைய சொந்தக் குறைபாடுகளால் ஆவிக்குரிய பாதை மறைக்கப்படுவது போல் தோன்றும் போது நாமும் எத்தனை முறை நமது பாதுகாப்பிற்காக நம்முடைய முந்தைய வாழ்க்கைக்கு திரும்பினோம்? அவர்கள் இரவு முழுவதும் தங்கள் வலைகளை வீசினார்கள், ஆனால் எந்தப் பயனும் இல்லை. இரவின் அமைதியும் வலைகளின் வெறுமையும் ஒரு நியாயத்தீர்ப்பு போல இருந்திருக்க வேண்டும் - தன் ஆண்டவர் இல்லாத ஒரு வெறுமையான வெற்றிடம் எதிரொலிப்பது போல. "நீங்கள் படவுக்கு வலதுபுறமாக வலையைப் போடுங்கள், அப்பொழுது உங்களுக்கு அகப்படும்..." என்று கரையிலிருந்து ஒரு குரல் ஒலித்தது. (வசனம் 6)

மீன்களின் எண்ணிக்கை பிரமிக்க வைத்தது - 153 மீன்கள் - மேலும் யோவான் எல்லாவற்றையும் மாற்றும் சத்தியத்தை மெதுவாகச் சொல்கிறார்- "அவர் கர்த்தர்" (வசனம் 7)

பேதுரு கடலில் குதித்து இயேசுவிடம் நீந்திச் செல்லும் அளவுக்கு அவர் உடனடியாக செயல்பட்டார். லூக்கா 5:1-11ஐ எதிரொலிக்கிறது, முதலில் பேதுரு இயேசுவை பின் தொடர இந்த ஒரு அற்பதமான மீன்பிடிப்பு அவரை ஈர்த்தது. ஆனால், வியர்வையில் நனைந்து, மூச்சுத்திணறலுடன் அவர் கரைக்கு ஊர்ந்து வரும் போது, அவரை நிச்சயமாக அப்படியே ஸ்தம்பிக்கச் செய்யும் ஒரு காட்சியைக் காண்கிறார்.

## கரி-நெருப்பு - ஒரு உணர்வுள்ள எதிரொலி

பேதுருவின் இருண்ட இரவையும் இந்தப் புதிய காலையையும் இணைக்கும் ஒரு குறிப்பிட்ட விவரம் இங்கு உள்ளது. "அவர்கள் கரைக்கு வந்திறங்கினபோது, கரிநெருப்புப் போட்டிருக்கிறதையும், அதின்மேல் மீன் வைத்திருக்கிறதையும், அப்பத்தையும் கண்டார்கள். "என்று யோவான் 21:9 நமக்குச் சொல்கிறது.

இங்கே "கரிநெருப்பு"என்பதற்குப் பயன்படுத்தப்படும் கிரேக்கச் சொல் ஆந்தரேக்கியன் (anthrakian) ஆகும். புதிய ஏற்பாட்டில் இது ஒரே ஒரு இடத்தில் மட்டுமே காணப்படுகிறது - (யோவான் 18:18 )அங்கே, பிரதான ஆசாரியனின் முற்றத்தில், இயேசு விசாரிக்கப்பட்டுக்கொண்டிருந்தபோது, பேதுரு நின்று ஒரு "கரிநெருப்பு" ((anthrakian - ஆந்தரேக்கியன்) அருகே குளிர்காய்ந்துக் கொண்டிருந்தார். முதல் முதலில் அந்த "கரிநெருப்பு"அருகேதான், பயத்தினாலும் தற்காப்பு உணர்வினாலும் செயலற்றுப்போன பேதுரு, "அந்த மனிதனை நான் அறியேன்" என்ற வார்த்தைகளை உரைத்தார்.

பேதுருவின் இருதயத்தில் பொங்கி வழிந்திருக்கக்கூடிய அந்த உணர்ச்சிப் பெருக்கைக் கற்பனை செய்து பாருங்கள். புகையின் வாசனை, தணல்களின் ஒளி - அது அவரது இருண்ட தருணத்தின் ஒரு உணர்வுள்ள எதிரொலியாக இருந்தது. எரியும் நிலக்கரியின் வாசனை, அவரது துரோகத்தின் வாசனையைப் போல இருந்தது. ஆயினும், இயேசு இந்தச் சூழலை பேதுருவை வெட்கப்படுத்துவதற்காக அல்ல, மாறாக அவரைக் குணப்படுத்துவதற்காகவே மீண்டும் உருவாக்கியிருந்தார்.

முற்றத்தில், கரி நெருப்பு மறுதலிப்பின் இடமாக இருந்தது. கரையோரத்தில், நெருப்பு புத்துயிரளிக்கும் இடமாக மாறுகிறது. இயேசு "வாருங்கள் போஜனம் பண்ணுங்கள் " என்று அழைக்கிறார். (யோவான் 21:12) அவர் காலை உணவோடு பேதுருவை வரவேற்கிறார்.இது நமது சொந்த வாழ்க்கைப் பயணத்திற்கான ஒரு ஆழமான சத்தியத்தை உணர்த்துகிறது : - கர்த்தர் நம்மை வெட்கப்படுத்துவதற்காக அல்ல, மாறாக, அங்கும் கூட அவருடைய கிருபை இருக்கிறது என்பதைக் காண்பிப்பதற்காகவே நாம் தோல்வியடைந்த இடத்திற்கே நம்மை அடிக்கடி மீண்டும் அழைத்துச் செல்கிறார். நமது பலவீனத்தின் நினைவிற்கு, தமது ஏற்பாட்டின் ஒரு புதிய நினைவால் அவர் பதிலளிக்கிறார்.

## கிழியாத வலை - முதிர்ச்சியின் ஒரு அடையாளம்

மறுசீரமைப்புப் பற்றிய உரையாடல்



தொடங்குவதற்கு முன்பு, நாம் அடிக்கடி கவனிக்கத் தவறும் ஒரு அற்புதத்திற்குள் மற்றொரு அற்புதம் உள்ளது. பெரிய மீன்களால் நிறைந்திருந்த அந்த வலை கரைக்கு இழுக்கப்பட்டபோது, சுவிசேஷத்தை எழுதியவர் ஒரு குறிப்பிட்ட விவரத்தை எழுதுகிறார் "நூற்றைம்பத்து மூன்று பெரிய மீன்களால் நிறைந்த வலையைக் கரையில் இழுத்தான், இத்தனை மீன்கள் இருந்தும் வலை கிழியவில்லை." (யோவான் 21:11)

இது லூக்கா 5ல் உள்ள பேதுருவின் முதல் அழைப்பிற்கு முற்றிலும் முரணாக உள்ளது. முந்தைய பதிவில், மீன்கள் அதிகமாக இருந்தபோது, "அவர்களுடைய வலை கிழிந்துபோனது" (லூக்கா 5:6) தன் ஊழியத்தின் தொடக்கத்தில், பேதுருவின் விசுவாசம் உண்மையானதாக இருந்தது, ஆனால் அவருடைய திறன் பலவீனமாக இருந்தது. அவர் "படிப்பறியாதவரும் பேதைமையுள்ளவராகவும்" (அப்போஸ்தலர் 4:13)இருந்தார். வைராக்கியம் நிறைந்திருந்தும், வேலையின் பாரத்தைத் தாங்குவதற்கான முதிர்ச்சி அவரிடம் இல்லாதிருந்தது.

இப்போது, இயேசுவுடன் மூன்று ஆண்டுகள் நடந்த பிறகும், அவரது பெருமையை நொறுக்கிய சாத்தானின் சோதனைக்குப் பிறகும் கூட, ஏதோ ஒன்று மாறியிருக்கிறது. வலையோ நிலைநிற்கிறது. "கிழியாத வலை" என்பது பேதுரு மேற்கொள்ளவிருக்கும் பணியின் ஒரு தீர்க்கதரிசனத்தின் சித்தரமாகும். அவர் இனி வெறும் மீன் பிடிப்பவர் அல்ல, அவர் இயேசுவின் ஆடுகளுக்கு மேய்ப்பனாக இருக்க தயாயராக இருக்கிறார்.

சுவிசேஷ யுகத்தில் "மாபெரும் பிடிப்புக்கு" பேதுரு இப்போது தயாராக இருக்கிறார் என்பதை, இந்த கிழியாத மீன் வலை குறிக்கிறது. இன்னும் சில வாரங்களில் பெந்தெகொஸ்தே நாளில், பேதுரு சுவிசேஷம் எனும் வலையை வீசி, ஒரே நாளில் கர்த்தருடைய மூவாயிரம் ஆடுகளை பிடிப்பார்.

இது அவருடைய இளமைக்கால வலைகளைப் போலல்லாமல், அவருடைய குணநலன் எனும் பாத்திரம் அந்த அழுத்தத்தினால் கிழிந்து போகாது. அவருடைய சுயம் என்ற விரிசல்கள் கிருபையால் சரிசெய்யப்பட்டது. ஆனால் கர்த்தர் இல்லாமல் தன்னால் தன்னை நிலைநிறுத்திக் கொள்ள முடியாது என்பதை அவர் அறிந்திருப்பதால், திருச்சபையை ஒன்றாக நிலைநிறுத்த அவர் இப்போது தயாராக இருக்கிறார்.

## மும்முனை கேள்வி - அன்பும் கிருபையும்

இந்தப் புதிய நெருப்பைச் சுற்றி, இயேசு பேதுருவிடம் உள்ளத்தின் ஆழத்தைத் தொடும் ஒரு கேள்வியைக் கேட்கிறார். " யோனாவின் குமாரனாகிய சீமோனே, இவர்களிலும் அதிகமாய் நீ என்னிடத்தில் அன்பாயிருக்கிறாயா என்றார்." (யோவான் 21:15) இது, "அன்பு என்பதற்கான கிரேக்க வார்த்தைகளான அகாப்பாவோ(agapao) மற்றும் ஃபிலியோ ஆகியவற்றின் மூலம் வெளிப்படுத்தப்படும், ஆழமான அர்த்தம் நிறைந்த ஒரு உரையாடலைத் தொடங்குகிறது.

## முதல் கேள்வி

"இவர்களைவிட நீர் என்னை அதிகமாக



நேசிக்கிறாயா ?"(யோவான் 21:15) இயேசு "அகாப்பாவோ" என்ற வார்த்தையைப் பயன்படுத்துகிறார், அதன் பொருள் தன்னலமற்ற, நிபந்தனையற்ற அன்பு - மனவுறுதியிலும் தியாகத்திலும் வேரூன்றிய மிக உயர்ந்த பக்தி.

பேதுரு ஒரு முறை, "உமது நிமித்தம் எல்லாரும் இடறலடைந்தாலும், நான் ஒருக்காலும் இடறலடையேன்.." (மத்தேயு26:33) என்று பெருமையாகக் கூறியிருந்தார். அவர் ஒரு மேலான விசுவாசத்தைக் கொண்டிருப்பதாக உரிமை கோரியிருக்கலாம். இப்போது, இயேசு அந்த உரிமையை ஆராய்கிறார். "இவர்களைவிட அதிகமாக" என்பது அநேகமாக மீன்களையோ, வலைகளையோ, அல்லது மற்ற சீஷர்களையோ குறிக்கிறது - அவர் இன்னும் மற்ற எல்லோரையும் விட இயேசுவை அதிகமாக நேசிப்பதாக உரிமை கோருகிறாரா?

"ஆம், ஆண்டவரே, நான் உம்மை நேசிக்கிறேன் என்று உமக்குத் தெரியும் (வசனம் 15) என்று பேதுரு பதில் அளித்தார். பேதுரு நட்பின் மீதான ஒரு இதமான பாசமான அன்பான ஃபிலியோவைக் கொண்டு பதிலளிக்கிறார் - அது ஆழமானது, ஆனால் அகாப்பாவோவைப் போல முழுமையானதல்ல. அவர் பணிவடைகிறார். அவர் இனி தன் மேன்மையைப் பற்றிப் பெருமை பேசவில்லை. தன்னால் நேர்மையாகக் கொடுக்க முடியும் என்று தனக்குத் தெரிந்ததை மட்டுமே அவர் வாக்களித்தார்.

இயேசுவின் கட்டளை, "என் ஆட்டுக்குட்டிகளை மேய்ப்பாயாக" என்று இயேசு கட்டளையிட்டார். அந்தக் கட்டளை மென்மையானதாக இருந்தது - அர்னியா"( arnia) என்பவைகள், பலவீனமான மற்றும் பராமரிப்பு தேவைப்படும் இளம் ஆடுகளாம். பேதுருவின் பலவீனமான நிலைக்குப் பொருத்தமாக, அவர் பின்வாங்கிய முதல் அடி சிறியதாக இருந்தது.

### இரண்டாவது கேள்வி

"நீ என்னை நேசிக்கிறாயா ? " (யோவான் 21:16)மீண்டும், இயேசு, தன்னலமற்ற அந்த அகாப்பே அன்பை வலியுறுத்தி, "என்னை நேசிக்கிறாயா ?" என்று கேட்கிறார். இவர்களைவிட மேலானவர்" என்ற ஒப்பீடு மறைந்துவிடுகிறது - இயேசு, தம்மீது பேதுருவின் இருதயம் வைத்திருந்த அன்பை மட்டுமே முழு கவனம் செலுத்துகிறார்.

"ஆம், ஆண்டவரே, நான் உம்மை நேசிக்கிறேன் என்பதை நீர் அறிவீர்" (வசனம் 16) என்று பேதுரு பதிலளித்தார். பேதுரு பிலியோ அன்பின் மீது உறுதியாக இருக்கிறார். இயேசுவை மறுதலித்த பிறகு தனது வரம்புகளை உணர்ந்ததால், அவர் அகாபே அன்பின் அளவுக்கு இணங்கவில்லை. ஆயினும், அவருடைய நேர்மை பிரகாசிக்கிறது.

"என் ஆடுகளை மேய்ப்பாயாக" என்று இயேசு கட்டளையிட்டார். (வசனம் 16)கிரேக்க மூலத்தில் "போயிமெய்ன்"( poimaine) என்ற சொல் பயன்படுத்தப்படுகிறது, அதன் பொருள் "மேய்ப்பர்" அல்லது "பராமரித்தல்" என்பதாகும் - இது முதிர்ந்த ஆடுகளை மேற்பார்வையிடும் ஒரு பரந்த பணியாகும். பேதுருவின் கடந்த காலத்தைப் பொருட்படுத்தாமல் அவர் மீதுள்ள நம்பிக்கையைப் பிரதிபலிக்கும் வகையில், அவருடைய பங்கு விரிவடைகிறது.

### மூன்றாவது கேள்வி

"நீ என்னை நேசிக்கிறாயா ?" (யோவான் 21:17) இப்போது, இயேசு பேதுரு பதில் அளித்த

பிலியோ நிலையை அப்படியே ஏற்றுக்கொண்டு அவரைச் சந்திக்கிறார். இது ஒரு தரம் தாழ்ந்த செயல் அல்ல - இயேசு, "என்மீது அன்பாய் இருக்கிறாயா ? " என்று கேட்டு, நிலைமையை மாற்றிக்கொள்கிறார். இது பேதுருவின் மூன்று மறுதலிப்புகளைப் பிரதிபலிக்கிறது, அன்பை உறுதிப்படுத்த மூன்று வாய்ப்புகளை வழங்குகிறது.

"ஆண்டவரே, நீர் எல்லாவற்றையும் அறிந்திருக்கிறீர் , நான் உம்மை நேசிக்கிறேன் என்பதையும் நீர் அறிந்திருக்கிறீர்" (வசனம் 17) என்று பேதுரு பதிலளித்தார். இயேசு மீண்டும் கேட்டதால் வருத்தமடைந்த பேதுரு, இயேசுவின் சர்வஞானத்தை நாடி, ஃபிலியோ"என்ற வார்த்தையை மீண்டும் கூறுகிறார். அவருடைய நம்பிக்கை போய்விட்டது, தன் முழு இருதயத்தையும் இயேசு நன்கு அறிந்திருந்தார் என்பதை அறிந்த பேதுரு அதையே சார்ந்திருந்தார்.

"என் ஆடுகளை மேய்ப்பாயாக" என்று இயேசு கட்டளையிட்டார். (வசனம் 17) அந்தப் பணி மீண்டும் உறுதிப்படுத்தப்படுகிறது - பேதுருவின் நோக்கம் நிலைநாட்டப்படுகிறது, அவரது வீரியம் மீட்கப்படுகிறது.

இந்த அழகு ஆண்டவரின் பராமரிப்பில் அடங்கியுள்ளது. தெய்வீக அன்பை அடையுமாறு அகாபே அன்பு பேதுருவுக்கு சவால் விடுகிறது, ஆனால் இயேசுவோ, பேதுருவை அவர் கொண்டிருந்த பிலியோ அன்போடு அவரை ஏற்றுகொண்டு, அவர் இருக்கும் இடத்திலிருந்து அவர் போகும் இடம் வரைக்கும் ஒரு பாலத்தை அமைக்கிறார்.

## மறுதலிப்பிலிருந்து மீட்பது - சிலுவையை ஏற்றுக்கொள்ளுதல்

மீட்பு என்பது ஒரு பணி விவரத்துடன் முடிவதில்லை. அது, பேதுருவின் தோல்வியின் மூல காரணத்தை நேரடியாக எடுத்துரைக்கும் ஒரு தீர்க்கதரிசனத்துடன் முடிவடைகிறது. பிரகாரத்தில், அவன் சங்கிலிகளுக்கும்,நியாயத்தீர்ப்புக்கும் சிலுவைக்கும் பயந்தார்.

இப்போது, இயேசு அவரை நேராகப் பார்த்து,



இந்தப் பாதை எங்கு வழிநடத்தும் என்பதைத் துல்லியமாகச் சொல்கிறார். "நீ இளவயதுள்ளவனாயிருந்தபோது உன்னை நீயே அரைகட்டிக்கொண்டு, உனக்கு இஷ்டமான இடங்களிலே நடந்து திரிந்தாய், நீ முதிர்வயதுள்ளவனாகும் போது உன் கைகளை நீட்டுவாய், வேறொருவன் உன் அரையைக் கட்டி, உனக்கு இஷ்டமில்லாத இடத்துக்கு உன்னைக் கொண்டுபோவார் என்று மெய்யாகவே மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன் என்றார்." (யோவான் 21:18) "இன்னவிதமான மரணத்தினாலே அவன் தேவனை மகிமைப்படுத்தப்போகிறானென்பதைக் குறிக்கும்படியாக இப்படிச் சொன்னார்." (வசனம் 19 ) என்று அவர் தெளிவாக சொன்னார்.

"உன் கைகளை நீட்டி" என்ற சொற்றொடர், சிலுவையில் அறையப்படுவதைக் குறிக்கும் ஒரு பொதுவானச் சொல்லாகும். நீ எனக்காக மரிப்பாய் என்றும், முற்றத்தில் இருந்து நீ எதற்காக தப்பி ஓடினாயோ, அந்த விதி இறுதியில் உன்னுடையதாக இருக்கும் என்று இயேசு பேதுருவிடம் கூறினார்.

அவருடைய மறுசீரமைப்பிற்கான இறுதிச் சோதனை இதுவே. மத்தேயு 16ல் மரணத்தைப் பற்றிப் பேசியதற்காக இயேசுவைக் கடிந்துகொண்ட அந்தப் பழைய பேதுரு இன்னும் அங்கே இருந்திருந்தால், அவர் வாதிட்டிருக்கலாம். அவர் தப்பி ஓடியிருக்கலாம். ஆனால், நொறுக்கப்பட்டு மறுசீரமைக்கப்பட்ட செய்யப்பட்ட பேதுருவோ, வெறுமனே செவிகொடுத்துக் கேட்டார். அவர் சிலுவையை ஏற்றுக்கொண்டார். தன் வாழ்வு இனி தனக்குச்

சொந்தமானதல்ல என்பதை அவர் ஏற்றுக்கொள்கிறார்.

